வர்த்தகமும் நிதியும்

(உயர்தர வகுப்பிற்குரியது)

நடைமுறை விடயங்கள்

•

தேவராஜன் ஜெயராமன்
B. Com. (Hons), M. B. A

மா. அ. தேவரத்னராஜா

வர்த்தகமும் நிதியும்
(உயர்தர வகுப்பிற்குரியது)

நடைமுறை விடையங்கள்

தொகுப்பு:
தேவராஜன் ஜெயராமன்
B, Com (Hons) M. B. A;

வெளியீடு:
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, *ஸ்ரான்லி வீதி,*
யாழ்ப்பாணம்.

1994

Title: Nadaimurai Vidaiyenkal

Author: D. JEYARAMAN B. Com (Hons) M. F. A.

Edition: First Edition 1986
Second „ 1988
Third „ 1991
Fourth „ 1994

Printers: ILANKAYAN PATHIPAKAM
Pathipaka salai,
336 (234 A) K. K. S Road.
JAFFNA.

Publishers: COLLEGE OF DEGREE STUDIES
148/1, Stanley Road,
JAFFNA.

Copyright: Author

Price: 35/-

வெளியீட்டாளர் உரை

இன்றைய மாணவர்களுக்கு உதவும் வகையில் தொடர்ந்து பல்வேறு துறையிலும் பாடநூல்களை நாம் வெளியிட்டு வருகிறோம். எமது வெளியீடுகளின் தரம் காரணமாக பெருகிவரும் ஆதரவு கண்டு நாம் ஊக்கம் பெறுகின்றோம். இந் நூலும் அவ்வாறே ஆதரவு பெறும் என நாம் நம்புகிறோம்.

இலங்கையில் வர்த்தகமும் நிதியும் எனும் பாடத்தை கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பில் கல்விபயிலும் மாணவர்கள் தொகை வருடாவருடம் அதிகரித்து வருகிறது. நடைமுறை விடயங்கள் எனும் நூல் விரிவுரையாளர் தே. ஜெயராமன் அவர்களால் 1986 இல் வெளியிடப்பட்டது. பின்னர் 1988-ம் ஆண்டு திருத்திய பதிப்பாக வெளியிடப்பட்டது. மீண்டும் 1991-ல் வெளியிடப் பட்டது. மீண்டும் திருத்திய பதிப்பாக இந்நூல் வெளியிடப்படுகிறது.

மின்தடை, காகிதத் தடை போன்ற பல இன்னல்கள் மத்தியிலும் இந்நூல் வெளியிடுவதை நாம் ஒரு தேசியப்பணியாகக் கருதுகிறோம்.

தனது தளரா முயற்சியினால் இந்நூலை உருவாக்கிய விரிவுரையாளர் தே. ஜெயராமன் அவர்களுக்கும், அழகுற அச்சிட்டுதவிய இலங்கயன் பதிப்பக முகாமையாளர், தொழிலாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டப்படிப்புக்கள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இ. சத்திஸ்வரன்
இயக்குநர்.

முன்னுரை

தமிழ் மொழிமூலம் வர்த்தகமும் நிதியும் பாடத்தை கற்போரின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்துச் செல்கிறது. அத்துடன் வர்த்தகமும் நிதியும் பாடம் கணிசமான அளவு நடைமுறை விடயங்களை உள்ளடக்கியுள்ளது. இத் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு 1986-ம் ஆண்டு இலங்கையில் முதன் முதலில் நடைமுறை விடயம் என்னும் நூலை தமிழில் வெளியிட்டேன். இதற்கு ஆசிரிய உலகமும் மாணவ சமுதாயமும் எனக்கு தந்த உற்சாகத்தினால் மேலும் சில நூல்களை வெளியிட முடிந்தது. இதன் தொடர்ச்சியாக கவே இந்நூல் வெளியிடப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையில் மின்சாரத் தடை, காகிதத்தடை ஆகியவற்றிற்கு இடையிலும் பட்டப்படிப்புக் கல்லூரி இயக்குநர் இராசா சந்திரஸ்வரன் அவர்களால் மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்ற விருப்பத்தின் பேரில் இந்நூல் வெளியிடப்படுகிறது. அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னரைப்போன்று இதற்கும் மாணவ ஆசிரிய உலகம் சிறந்த வரவேற்புத்தரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இந்நூலை வெளியிட்ட பட்டப்படிப்புகள் கல்லூரிக்கும் குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த இலங்கையன் பதிப்பகத்தாருக்கும் எனது நன்றிகள்.

வணிக முகாமைத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

தேவராஜன் ஜெயராமன்

இலங்கை முதலீட்டுச் சபை
(BOI - Board of Investment of Sri Lanka)

பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு தற்போது இலங்கை முதலீட்டுச் சபை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இச்சபை பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

(i) முதலீட்டாளர்களுக்குதேவையான தகவல்களை வழங்குதல் அவர்களை வழிநடத்துதல்;

(ii) முதலீட்டாளர்கள் தொழிற்சாலைக்கான இடத்தெரிவினை மேற்கொள்வதற்கு உதவுதல். அத்துடன் தொழிற்சாலை கட்டிடத்தினை அமைப்பது தொடர்பாக ஆலோசனை வழங்குதல்,

(iii) தொலை தொடர்பு, மின்சாரம், நீர் விநியோகம் என்பன தொடர்பான வசதிகளை வழங்குதல்.

(iv) வெளிநாட்டு முதலீடுகளுக்கான அங்கீகாரத்தினை வழங்குதல்.

(v) வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தேவையான தகவல்களை வழங்கும் பொருட்டு "இலங்கை வெளிநாட்டு முதலீட்டாளருக்கான வழிகாட்டி" என்னும் வெளியீட்டினை மேற்கொள்கின்றது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பின்வரும் துறைகள் தவிர்ந்த ஏனைய துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ளமுடியும்.

(அ) நகை அடைவு பிடித்தல்

(ஆ) கரையோர மீன்பிடி

(இ) கடன் வழங்கும் செயற்பாடு

(ஈ) ஒரு மில்லியன் அமரிக்க டொலருக்கு குறைவான முதலீடுகளைக் கொண்ட சில்லறை வியாபாரம்

மேற் குறிப்பிட்ட துறைகளில் இலங்கைப் பிரஜைகள் மட்டுமே முதலீடுகளை மேற்கொள்ள முடியும்.

இலங்கை முதலீட்டுச் சபை பின்வரும் ஊக்குவிப்புக்களை முதலீட்டாளர்களுக்கு வழங்குகின்றது;

(i) தீர்வையின்றி பொதி, இயந்திரம், மூலப் பொருட்கள், என்பனவற்றினை இறக்குமதி செய்வதற்கு வசதி அளித்தல்

(ii) தீர்வையின்றி ஏற்றுமதி செய்ய வசதி அளித்தல்

(iii) பங்கு லாபம், இலாபம் என்பனவற்றினை கட்டுப்பாடின்றி வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்வதற்கு வசதி அளித்தல்.

(iv) சுதந்திரமாக பங்குகளை கைமாற்றம் செய்வதற்கான உரிமை.

(v) இரட்டை வரி சலுகை (Double Taxation Relief) உடன்படிக்கை மூலம் வரிச்சலுகைகளை வழங்குதல். இலங்கை 30 நாடுகளுடன் இரட்டை வரி சலுகை உடன்படிக்கையினை மேற்கொண்டுள்ளது

(vi) முதலீடுகளுக்கான உத்தரவாதத்தினை வழங்குதல்

முதலீட்டு பாதுகாப்பு உத்தரவாத உடன்படிக்கை (Investment Protection and Guarantee Agreement)

வெளிநாட்டு முதலீடுகளுக்கு உத்தரவாதம், பாதுகாப்பு என்பனவற்றினை வழங்கும் நோக்கில் இலங்கை தனித்தனியாக பின்வரும் நாடுகளுடன் உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளது. அவையாவன பெல்ஜியம், சீனா, டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான், கொரியா, லக்ஸ்சர்ம் பேர்க், நெதர்லாந்து. நோர்வே, ருமேனியா, சிங்கப்பூர், சுவீடன், சுவிற்சலாந்து, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமரிக்கா

இலங்கை அரசியல் யாப்பு மேற்குறிப்பிட்ட உடன்படிக்கை மூலம் வெளிநாட்டு முதலீடுகளுக்கு பாதுகாப்பினை வழங்குகின்றது. மேலும் "பலபக்க முதலீட்டு உத்தரவாத முகவர்" (MIGA = Multilateral Investment Guarantee Agency) மூலம் மேலும் முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

இரட்டை வரி சலுகை உடன்படிக்கை (Double Tax Relief Agreements)

இலங்கை பல நாடுகளுடன் இரட்டை வரிச் சலுகை உடன்படிக்கையினை மேற்கொண்டுள்ளது.

உதாரணம்:- பங்களாதேஷ், பெல்ஜியம், கனடா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இத்தாலி, ஜப்பான், கொரியா, மலேசியா) இவ் உடன்படிக்கை பின்வரும் சலுகைகளை வழங்குகின்றது.

(i) பங்கு லாபங்கள் மீது குறைவான வரி விதிப்பு

(ii) வட்டி, ஆக்கவுரிமைகள் தொடர்பாகவும் குறைந்த வரி விதிப்பு

ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம்
(Export Promotion Zone)

இலங்கையில் தற்போது நான்கு வலயங்கள் தொழிற்படுகின்றன. அவையாவன

(i) கட்டுநாயக்கா ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம்

(ii) கொக்கல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம்

(iii) பியகம ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம்

(iv) மிகிந்தல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம்

இதனைத் தவிர கண்டியில் ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கட்டுநாயக்கா ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் அல்லது சுதந்திர வர்த்தக வலயம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு அண்மித்துக் காணப்படுகின்றது இவ்வலயம் 1978-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. வேலைவாய்ப்பினை வழங்குவதனைப் பொறுத்து இவ்வலயம் உலகில் முதலாவது இடத்தினை வகிப்பதாக உலகவங்கி மதிப்பிட்டுள்ளது.

பியகம வலயம் கொழும்பிற்கு வடகிழக்கே 24 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இவ்வலயம் 186-ல் உருவாக்கப்பட்டது.

கொக்கல வலயம் காலித்துறைமுகத்தில் இருந்து 15 கிலோமீற்றர் தொலைவில்அமைந்துள்ளது. இவ்வலயம் 1991-ல் ஆரம்பிக்கப்பட்டது.

மிகிந்தல வலயம் அனுராதபுர மாவட்டத்தில் மிகிந்தல என்னும் இடத்தில் 1993-ல் ஆரம்பிக்கப்பட்டது.

விசேடமாக வெளிநாட்டு முதலீட்டாளரை வரவழைக்கும் நோக்கில் இது அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் அல்லது சுதந்திர வர்த்தக வலயம் பின்வரும் சிறப்பு அம்சங்களைக் கொண்டிருக்கும்.

(1) ஒரு முகப்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகள்: (நிலம், கட்டிடம், நீர், மின்சாரம்)

(2) வரிகள் விலக்கு அளிக்கப்படும் அல்லது சலுகை வீத வரிகள்.

(3) பாரிய ஏற்றுமதிக்கான கைத்தொழில் காணப்படும்.

(4) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கூடிய பங்களிப்பினை கொண்டிருத்தல்.

சுதந்திர வர்த்தக வலயம் மூலம் நாடு பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(1) பலர் வேலைவாய்ப்பு பெறமுடியும்.
(2) அந்நிய செலாவணி உழைப்பு.
(3) நவீன தொழில் நுட்பங்களைப் பெறமுடியும்.
(4) கைத்தொழில் அபிவிருத்தி.

கைத்தொழில் பேட்டை
(Industrial Estate)

உள்ளூர் கைத் தொழில்களை மேம்படுத்தும் நோக்குடன் கைத் தொழில் பேட்டை அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் கைத்தொழிலாளருக்கு தேவையான அடிப்படை வசதிகள் வழங்கப்படுகின்றது. இவ் அமைப்பு கைத்தொழில் அமைச்சினால் நிர்வகிக்கப்படுகின்றது. முதலாவது கைத்தொழில் பேட்டை "ஏக்கல" கைத்தொழில் பேட்டையாகும். இது மிகவும் வெற்றிகரமாக தொழிற்படுகின்றது. கைத்தொழில் பேட்டைகள் மூலம் குறிப்பிட்ட இடப் பிரதேசத்தில் பல கைத்தொழில்களை உருவாக்க வசதி அளிக்கப்படுகின்றது. இதன் மூலம் பலர் வேலைவாய்ப்பு பெறமுடியும். கைத்தொழில் அபிவிருத்தி ஏற்படும். உற்பத்தியும் அதிகரிக்கும்.

மறுபுறத்தில் கைத்தொழில் பேட்டை மூலம் குறிப்பிட்ட இடப் பிரதேசத்தில் பல கைத்தொழில்கள் அமைக்கப்படுவதனால்,

(1) தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.
(2) சூழல் மாசுபடுதல் அதிகம். ஒரு தொழிற்சாலை இன்னொரு தொழிற்சாலை சூழலை மாசடையச் செய்யும்.
(3) ஒரு தொழிற்சாலையில் ஏற்படும் வேலை நிறுத்தம் கைத் தொழில் பேட்டையிலுள்ள மற்றைய தொழிற்சாலைக்கு பரவலாம்.

சுதந்திர துறைமுகப் பட்டணம்
(Free Port)

தீர்வையின்றி பொருட்களை ஏற்றுமதி செய்யவும் இறக்குமதி செய்யவும் இடமளிக்கும் துறைமுகம் இதுவாகும். இதன்மூலம் அவ் நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி அதிகரிக்கின்றது. அத்துடன் உல்லாசப் பிரயாணிகளைக் கவரவும், அந்நிய செலாவணிகளை உழைக்கவும் முடியும்.

உதாரணம்:- சிங்கப்பூர் துறைமுகப்பட்டணம்.

எல்லை வியாபாரம் (Margin Trading)

1 - 10 - 1993 முதல் இலங்கை வங்கி எல்லை வியாபாரத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் பிரகாரம் இலங்கை வங்கியுடன் அந்நிய செலாவணி கணக்கினை வைத்திருப்போர், வைப்பிலுள்ள தொகையின் ஐந்து மடங்கிற்கு அந்நிய செலாவணி வியாபாரத்தை மேற்கொள்ள முடியும் ஐ. அமரிக்க டொலர், ஸ்ரேலிங் பவுண், டியூச் மார்க், ஜப்பான் யென், சுவிஸ் பிராங், அவுஸ்திரேலியா டொலர் ஆகிய நாணயங்களில் இவ்வசதி வழங்கப்படுகின்றது. ஆகக் குறைந்த எல்லை வியாபார தொகை ஒரு இலட்சம் ஐ. அமரிக்க டொலராகும்.

இலங்கைவங்கி 1 - 1 - 1994 முதல் குத்தகைக்கு நிதி வசதியினையும் அளிக்கின்றது. இயந்திரம், அலுவலக உபகரணம், வாகனங்களைக் கொள்வனவு செய்ய இவ்வசதி அளிக்கப்படுகின்றது.

சார்ட்டட் வங்கி
(Chartered Bank)

சான்ட்டட் சார்ட்டட் வங்கி தனது வங்கியில் நடைமுறை கணக்கு வைத்திருப்போருக்கு ஆயுட் காப்புறுதி வசதியினை வழங்குகின்றது. 65 வயதுக்குட்பட்டவரும், மாதாந்தம் ஆகக் குறைந்தது சராசரியாக ரூபா 10,000 தை கணக்கில் வைத்திருப்பவர் இவ் வசதியினைப் பேணமுடியும்.

புதிய வைப்புச் சான்றிதழ்
(New Certificates of Deposit)

1993 ஒக்டோபர் 5-ம் திகதி முதல் வணிக வங்கிகள் நான்கு வருடங்களிற்கு குறையாத முதிர்வு காலத்தைக் கொண்ட வைப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதனூடாக பெற்றுக்கொள்ளப்படும் நிதி நீண்ட கால கடன் கொடுப்பனவிற்கும் பயன்படுத்தப்படும். வைப்புச் சான்றிதழ் ரூபா ஒரு இலட்சத்திற்கு (ரூபா 100,000/-) குறையாத முகப் பெறுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும். இச்சான்றிதழ்களை கொள்வனவு செய்வோர் வரிச் சலுகைகளைப் பெறமுடியும்.

மத்திய வங்கியின் பிணைகள்
(Central Bank Securities)

கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இலங்கை மத்திய வங்கி தனது சொந்த பிணைகளை வழங்குவதில் ஈடுபடுகின்றது. இவற்றினை

கொள்வனவு செய்வதற்கான அழைப்பு முறைப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட முதலாந்தர விநியோகஸ்தரிடமிருந்து கோரப்படும். திறைசேரி உண்டியல்களைப் போன்று இவை, ஏலத்தில் விற்பனை செய்யப்படும். அத்துடன் கைமாற்றம் செய்யப்பட கூடியது.

மத்திய வங்கியின் பிணைகள் 3, 6 அல்லது 12 மாத முதிர்வுகளைக் கொண்டவை.

திறைசேரி உண்டியலுக்கான மீள் கொள்வனவு சந்தை (Repurchase Market for Treasury Bills)

4-10-93 முதல் இலங்கை மத்திய வங்கி திறைசேரி உண்டியலுக்கான மீள் கொள்வனவு திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. மத்திய வங்கியின் இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தைக்குள் பிரவேசிக்கக் கூடிய சகல வணிக வங்கிகளும், ஏனைய நிறுவனங்களும் மீள் கொள்வனவு உடன்படிக்கையில் ஈடுபடமுடியும். எவ்விலைகளில் மீளக்கொள்வனவினை மேற்கொள்ளமுடியும் என்பது தொடர்பான தகவல்கள் தினமும் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும்.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி (RRDB - Regional Rural Development Bank).

1985-ம் ஆண்டு 15-ம் இலக்க பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் பிரதேச வங்கிகள் அறிமுகப்படுத்தப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தினை மத்திய வங்கியின் நாணயச் சபை கொண்டுள்ளது. முதலாவது வங்கி 1985-ல் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 17 மாவட்டங்களில் இவ்வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இவ்வங்கியின் மூலதனம் முழு அளவில் மத்திய வங்கியால் ஈடுபடுத்தப்பட்டது. எனினும் உருவாக்கப்பட்டு மூன்று வருடங்களின் பின்பு வழங்கிய மூலதனத்தில் 49% தை சுதேசிய வணிக வங்கிகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களிற்கும் வழங்கமுடியும் எனினும் கூட்டுறவு சங்கங்களிற்கு வழங்கப்படும் மூலதனம், வழங்கிய மூலதனத்தில் 10%க்கு மேற்படலாகாது.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பிரதான தொழிற்பாடுகளாவன:

(அ) சிறிய, நடுத்தர, நீண்ட கால கடன் வசதிகளை வழங்குதல்.

(ஆ) நடைமுறை வைப்பு, சேமிப்பு வைப்பு கணக்கு வசதிகளை வழங்குதல்.

(இ) அந்நிய செலாவணி கொடுக்கல், வாங்கல் தவிர்ந்த ஏனைய வணிக வங்கியின் எல்லா செயற்பாடுகளையும் வழங்குதல்.
(ஈ) நகை அடைவு பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுதல்.
(உ) ஆவணங்கள். சொத்துக்கள் என்பனவற்றிற்கு எதிராக முற் பணங்கள், கடன் வசதிகளை வழங்குதல்.
(ஊ) விவசாயப் பொருட்கள், கடல் உணவுகள் என்பனவற்றினை பதனிடுவதற்கும், சந்தைப்படுத்துவதற்கும் உதவுதல்.

இவ்வங்கியின் பிரதான நோக்கங்களாவன:

(அ) கிராமிய பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்தல்;
(ஆ) விவசாயம், குடிசைக் கைத்தொழில், சிறு கைத்தொழில். மீன்பிடி, வர்த்தகம் ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்தல்,
(இ) மேற்குறிப்பிட்ட துறைகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக, கிராமிய பொருளாதாரத்தினை விருத்தி செய்தலும், கிராமிய மக்களுக்கு வேலைவாய்ப்பு வசதியினை வழங்குதல்.

தொடர்பாடல்:- (Communication)

தொடர்பாடல் அல்லது செய்தித் தொடர்பு எனப்படுவது ஒரு வரிடமிருந்து இன்னொருவருக்கு தகவல்கள் பரிமாற்றப்படுவதனைக் குறிக்கும். பயனுறுதிமிக்க ஒரு தொடர்பாடல் முறை பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்.

(i) குறைந்த செலவில் தகவல்களை அனுப்பக்கூடியதாக இருக்கும்.
(ii) தெளிவு உடையதாகக் காணப்படும்,
(iii) குறிப்பிட்ட தொடர்பாடல் முறை இலகுவாக கிடைப்பதாகக் காணப்படுதல் வேண்டும்.
(iv) சட்டபூர்வமாக அதனைப் பயன்படுத்தக்கூடியதாகக் காணப் படுதல் வேண்டும்.
(v) கூடியளவு நம்பிக்கைத் தன்மையைக் கொண்டதாகக் காணப் படுதல் வேண்டும்
(vi) விரைவாக தகவல்களை பரிமாற்றக்கூடியதாகக் காணப்படுதல் வேண்டும்.

தொடர்பாடலுக்கான சாதனத்தை தெரிவு செய்யும் போது பின்வரும் காரணிகளைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

(i) செய்தியின் தன்மை
(ii) செய்தி சென்றடைய வேண்டிய வேகம்
(iii) செய்தி அனுப்புவது தொர்பான செலவு
(iv) செய்தி சென்றடைய வேண்டிய தூரம்
(v) கிடைக்ககூடிய செய்தி தொடர்பு சாதனம்

டெலக்ஸ் (Telex)

டெலக்ஸ் பாரிய தட்டச்சு இயந்திரம் போன்ற அமைப்புடைய நுண் அலைத் தொடர்பு சாதனமாகும். இதனுடன் எண் வட்டம் (Dial) காணப்படும். டெலக்ஸ் இயக்குனர் குறிப்பிட்ட நிறுவனத்தின் டெலக்ஸ் இயக்குனருடன் தொடர்பு கொண்டு செய்தியினை அடிக்கும் போது மற்றைய டெலக்ஸ் நாடாவில் அச்செய்தி தன்னியக்கமான முறையில் பதியும். டெலக்ஸ் மூலம் செய்தியினை அனுப்புவதனால் பின்வரும் நன்மைகளைப் பெறலாம்.

(i) செலவு குறைந்த முறை
(ii) விரைவாக செய்தியினை அனுப்பலாம்.
(iii) உடனே பதிலைப் பெறலாம்
(iv) தபால் கந்தோருக்கு செல்லவேண்டியதில்லை.
(v) எந்த நேரமும் செய்தியினைப் அனுப்பலாம்.

டெலக்ஸ் செய்தியினைப் பெறவிரும்புவோர் ஸ்ரீ லங்கா டெலிகொம்மிடம் அனுமதி பெறவேண்டும்.

ஃபெக்ஸ் (Facsimile)

ஆவணங்கள், படங்கள், வரைபுகள் போன்றவற்றை ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு அனுப்புவதற்கு ஃபெக்ஸ் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு முனையில் உள்ள ஃபெக்ஸ் இயந்திரத்தில் ஆவணங்கள், வரைபுகள், படங்கள் என்பனவற்றின் மூலப்பிரதியை இட்டு மறுமுனையிலுள்ள ஃபெக்ஸ் இயந்திர மூலம் அதன் ஒத்த பிரதிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். ஃபெக்ஸ் முறையில் பின்வரும் நன்மைகள் காணப்படுகின்றன.

(அ) ஆவணங்கள், படங்கள், வரைபுகள் என்பனவற்றின் பிரதிகளை ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு அனுப்பலாம்.
(ஆ) வேகம் கூடியது.
(இ) விரும்பிய மொழிகளில் உடனடியாகக் கிடைக்கச் செய்யலாம்.

டெலக்ஸ், ஃபெக்ஸ் ஆகிய இரண்டு தொடர்பாடல் முறைகளிலும் காணப்படும் ஒற்றுமைகளாவன.

(அ) இரண்டு முறைகளிலும் தொடர்பாடலுக்கு பொறி பயன்படுத்தப்படுகின்றது.
(ஆ) இரண்டு முறைகளிலும் வான் அலைகள் மூலம் தகவல்கள் பரிமாற்றப்படுகின்றது.
(இ) இரண்டு முறைகளிலும் அனுப்புபவர், பெறுபவர் ஆகிய இருவரும் ஒரே இயல்பான பொறியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(ஈ) இவ் இரண்டு முறைகளிலும் தபால் கந்தோருக்குச் செல்ல வேண்டியதில்லை.

இவ்விரண்டு முறைகளிலும் காணப்படும் வேற்றுமைகளாவன.

(அ) டெலக்ஸ் இயந்திரத்தில் அச்சிட்ட செய்தியினை மறுமுனையி லுள்ள டெலக்ஸ் பொறியில் பெறலாம்.

ஃபக்ஸ் பொறியில் மூலப்பிரதியினை இட்டு மறுமுனையி லுள்ள ஃபக்ஸ் பொறியில் அதன் ஒத்தபிரதியினைப் பெறலாம்

(ஆ) டெலக்ஸ் செய்தியில் எழுத்துக்களாகவே அனுப்பலாம். ஆனால் ஃபெக்ஸ் செய்தியில் விரும்பிய வடிவம், வரைபுகள் அடையாளங்களாகவோ அனுப்பலாம்.

(இ) டெலக்ஸ் செய்தியிலும் வேகமாக ஃபக்ஸ் செய்தியினை அனுப்பலாம்.

(ஈ) ஒப்பீட்டளவில் ஃபக்சிலும் பார்க்க டெலக்ஸ் செலவு குறைந்த முறையாகும்.

தூதுவர் சேவை (Courier Service)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு ஆவணங்கள், கடிதங்கள், பொதிகள் என்பன வற்றினைப் பாதுகாப்பாகவும் விரைவாகவும் அனுப்புவதற்கு பயன் படுத்தும் முறை இதுவாகும். இச்சேவையை மேற்கொள்ளும் நிறு வனங்கள் தூதுவர்சேவை நிறுவனங்கள் எனப்படும்;

உதாரணம்:- DHL

உள்நாட்டில் தூதுவர் சேவை நிறுவனங்கள் கடிதங்கள் ஆவணங் கள் என்பனவற்றினை திரட்டி நேரடியாக வினியோகிக்கின்றன. வெளிநாட்டைப் பொறுத்தளவில் திரட்டிய ஆவணங்கள், பொதிகள் என்பன முகவர்கள் மூலமாக விமானம் மூலம் அனுப்பி பொது நிலையங்களில் வைத்து வகுத்து, உரிய இடத்திற்கு விமானம் மூலம் அனுப்பப்பட்டு முகவர் மூலமாக பொறுப்பு ஏற்கப்பட்டு உரிய வருக்கு விநியோகிக்கப்படும்.

முகவர் தபால் நிலையம் (Agency Post Office)

1977க்குப் பின்பு தனியாரும் தபால் திணைக்களத்தின் அனுமதி யுடன் தபால் கந்தோரை நடத்த அனுமதி வழங்கப்பட்டது. இது "முகவர் தபால் நிலையம்" எனப் பெயரி கொண்டு அழைக்கப்படுகின் றது. முகவரானவர் மீளப் பெறமுடியாத வைப்பாக ரூபா 50,000/- செலுத்த வேண்டும். முகவர் தபால் நிலையங்கள் தலைநகரிலும் பிரதான நகரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது;

இலங்கையில் முகவர் தபால் நிலையங்கள் அமைக்கப்பட்டதன் மூலம் தபால் கந்தோர்களின் அழுத்தங்கள் குறைக்கப்பட்டதுடன், அரசாங்கத்தின் சில செலவுகளையும் குறைக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் வேலைவாய்ப்புக்களையும் வழங்கக் கூடியதாக இருந்தது. இவ் முகவர் தபால் நிலையங்கள் பின்வரும் பொதுவான சேவைகளை வழங்குகின்றது.

(i) கடிதங்கள், பார்சலைப் பொறுப்பேற்றல்.

(ii) தந்திகளைப் பொறுப்பேற்றல்.

(iii) பதிவுத் தபால்களைப் பொறுப்பேற்றல்.

(iv) தொலைபேசி அழைப்புக்களை வழங்குதல்.

(v) முத்திரைகளை விற்றல்

முகவர் தபால் நிலையம் தபால்வினியோகத்தில் ஈடுபடுதல்.

தபால் திணைக்களம்
(Postal Department)

தபால் திணைக்களம் தபால் தொடர்புகளின் நடைமுறை, அபிவிருத்தி என்பனவற்றிற்கு பொறுப்பாகவுள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு கடிதங்களைப் பொறுப்பு ஏற்றல், வினியோகித்தல், பொதிகளைப்பொறுப்பு ஏற்றல், பணத்தினை ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு அனுப்ப உதவுதல், தந்திகளைப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளல், வானொலி தொலைக்காட்சி அனுமதிப்பத்திரங்களை வினியோகித்தல் போன்ற சேவைகளை பொது மக்களுக்கு வழங்குகின்றது.

தற்போது தபால் திணைக்களம் திறமையான சேவைகளை வழங்கவும், செலவுகளைக் குறைக்கும் பொருட்டும் மறு சீரமைப்பு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

மறுசீரமைப்பில் குறிப்பிடத்தக்க அம்சங்களாவன:

(i) ஒன்பது பிரதி தபால் மா அதிபர்கள் ஒவ்வொரு மாகாணத்திற்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டது.

(ii) இவர்களுக்கு போதிய நிர்வாக நிதி அதிகாரங்கள் வழங்கப்பட்டமை.

(iii) மத்திய தபால் பரிவர்த்தனைக்கான நிரந்தரக் கட்டிடம் சீனாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ளது

(iv) ஒன்பது உயர் நிர்வாக செயலாளர்கள், ஒன்பது மாகாணங்களுக்கும், பிரதிதபால் மா அதிபர்களுக்கு உதவி செய்ய நியமிக்கப்பட்டதோடு சுப்பிரின்டென்ற் பதவிகள் அகற்றப்பட்டமை.

தொலை பேசி அட்டைகள் (Pay Phone Cards)

தற்போது இலங்கையில் இரண்டு நிறுவனங்கள் தொலைபேசி அட்டைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

(i) லங்கா பேபோன்ஸ் லிமிட்டெட்

(ii) ஸ்ரீலங்கா டெலிகொம்

தொலைபேசி அட்டையைக் கொள்வனவு செய்து பணத்திற்குப் பதிலாக இவ் அட்டையைப் பயன்படுத்தி தொலைபேசி அழைப்பினை உள்நாட்டிற்குள்ளும், வெளி நாட்டிற்கும் பெற்றுக் கொள்ள முடியும். இவ் அட்டையைப் பயன் படுத்தி தொலைபேசி அழைப்பினைப் பெற்றுக் கொள்ளும் போது, தொலைபேசி அழைப்பிற்கான கட்டணம் அட்டையின் பெறுமதியில் இருந்து குறைக்கப்படும் தொலைபேசி அட்டைகளைப் பயன் படுத்துவதனால் ஏற்படும் நன்மைகளாவன.

(i) பணத்தினை எடுத்துச் செல்ல வேண்டியதில்லை.

(ii) எந்நேரமும் தொலைபேசி சேவையைப் பெறலாம்.

(iii) நெருக்கடியற்ற நேரங்களில் குறைந்த கட்டணத்தில் தொலைபேசி அழைப்பினைப் பெறலாம்.

செலியூலர் தொலைபேசி (Cellular Phone)

தனியார் துறையினருக்கு இலங்கையில் செலியூலர் தொலைபேசி அல்லது நகரும் தொலைபேசியை இயக்குவதற்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. செலியூலர் தொலைபேசி எனப்படுவது விசேட வலைப் பின்னல் செய்முறைக்கேற்ப கம்பிகள் இன்றி வான் அலைகள் மூலம் தொழிற்படும் தொலைபேசியாகும். இத் தொலைபேசி முறையில் சில குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சங்கள் காணப்படுகின்றன.

(i) ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்ல முடியும்.

(ii) பிரயாணத்தின்போதும் தொடர்பு கொள்ள முடியும்.

(iii) வேறு நபர் தொலைபேசியைப்பயன் படுத்துவது தடுக்கப் படும்.

(iv) விரும்பிய இடத்தில் விரும்பிய நேரத்தில் தொடர்பு கொள்ள முடியும்.

செலியூலர் தொலைபேசி சாதாரண தொலைபேசியைவிட பின் வரும் அம்சங்களில் வேறுபடுகின்றது.

(i) செலியூலர் தொலைபேசி வான் அலைகள் மூலம் தொழிற் படுகின்றது. சாதாரண தொலைபேசி கேபிள்கள் மூலம் தொழிற்படுகின்றது.

(ii) செலியூலர் தொலைபேசி அதிக செலவில் பெறவேண்டும் ஆனால் சாதாரண தொலை பேசியை குறைந்த செலவில் பெறலாம்.

(iii) அழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளும்போதும், எடுக்கும் போதும் கட்டணம் அறவிடப்படும். அழைப்புக்களை எடுக்கும்போது மட்டும் கட்டணம் அறவிடப்படும்.

(iv) எடுத்துச் செல்ல முடியும். எடுத்துச் செல்ல முடியாது

(v) குறிப்பிட்ட சில பிரதேசங்களில் மட்டும் இவ் வசதி கிடைக்கும். (உதாரணம்;- கொழும்பு, கண்டி) சாதாரண தொலைபேசி வசதி எல்லாப் பிரதேசங்களிலும் கிடைக்கும்.

(vi) செலியூலர் தொலைபேசி நிர்வாகம் தனியார் துறையின ரால் மேற்கொள்ளப்படுகின்றது. சாதாரண தொலை பேசி நிர்வாகம் சிறீலங்கா டெலிகொம் நிறுவனத்தினால் நிர்வகிககப்படுகின்றது.

தனியார் தபால் பெட்டி (Private Post Box)

தினமும் பெருமளவு கடிதங்களைப் பெற்றுக் கொள்ளும் பாரிய நிறுவனங்கள் தபால் திணைக்களத்தின் அனுமதியுடன் தனியான ஒரு தபால் பையை பெற்றுக் கொள்ளும். இதற்கு ஒரு இலக்கமும் வழங்கப்படும். இது தபால் பெட்டி இலக்கம் எனப்படும். தபால் கந்தோரில் இருந்து நிறுவனத்திற்கும், நிறுவனத்தில் இருந்து தபால் கந்தோருக்கும் கடிதங்களை அனுப்ப இவ் தபால் பை பயன்படுத்தப் படும். இம்முறையில் காணப்படும் அனுகூலங்களாவன,

(i) நீண்ட விலாசங்களைப் பயன்படுத்த வேண்டியதில்லை.

(ii) கடிதங்கள் பாதுகாப்பாக நிறுவனத்தினை வந்தடையும்.

(iii) தினமும் காலதாமதமின்றி தபால் கந்தோரில் இருந்து நேரடியாக கடிதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மத்திய வைப்பு முறை (Central Depository System)

பங்குகளை கைமாற்றம் செய்யும்போது பங்குச் சான்றிதழை வழங்காமல் விரைவாக பங்குகளைக் கைமாற்றம் செய்யும் ஒரு முறையே மத்திய வைப்பு முறையாகும். பங்குகளை கைமாற்றம் செய்பவர் மத்திய வைப்பு முறையில் ஒரு கணக்கினை ஆரம்பித்தல் வேண்டும். பங்குதாரரின் சார்பாக மத்தியவைப்பு முறையூடாக பங்குகள் பொறுப்பு ஏற்கப்பட்டு அவை கைமாற்றம் செய்யப்படும். மத்திய வைப்பு முறை பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது.

(i) விலை கூறப்பட்ட கம்பனிகளின் முதலீட்டாளர்கள் பங் குகளைக் கைமாற்றம் செய்யும்போது, பங்குக் கைமாற் றம் செய்யும் நோக்கத்திற்காக அவற்றினைப் பொறுப் பேற்றலும் பாதுகாத்தலும்.

(ii) பங்குகள் தொடர்பாக கணக்குகளை வைத்திருத்தல்.

(iii) ஒவ்வொரு பங்காளர் தொடர்பாகவும் கணக்குகளை வைத்திருத்தல்.

(iv) புதிய கொடுக்கல் வாங்கல் செய்வோரைப் பதிவு செய்தல்

(v) மாதாந்த கணக்குக் கூற்றுக்களைப் பதிவு செய்து பங்காளர்கட்கு அனுப்புதல்.

மத்திய வைப்பு முறையூடாக பின்வரும் நன்மைகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

(i) விரைவாக பங்குகளைக் கைமாற்றம் செய்யலாம்.

(ii) காகித வேலைகள் குறைக்கப்படுகின்றது.

(iii) தேவையற்ற சிரமங்களையும் குறைக்கக் கூடியதாக உள்ளது

(iv) பங்குச் சான்றிதழ் தொலைதல் தவிர்க்கப்படுகின்றது.

மத்திய வைப்பு முறையானது பொறுப்பு வரையறுக்கப்பட்ட மத்திய வைப்பு முறை (தனியார்) லிமிட்டெட்டினால் நிர்வகிக்கப் படுகின்றது. இது 1991ல் உருவாக்கப்பட்டது.

நியாய வியாபார ஆணைக்குழு (Fair Trading Commission)

1987 ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி இவ் ஆணைக்குழு நிறுவப்பட்டது. தேசிய விலை ஆணைக் குழுவில் உள்ளசில குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு நுகர்வோர்களது நலன்களை மேலும் பாதுகாக்கும் பொருட்டும் இவ் ஆணைக்குழு தோற்றுவிக்கப் பட்டது. இதன் பிரதான குறிக்கோள்களாவன,

(i) வியாபாரத்தில் நிலவும் ஏகபோக உரிமையைக் கட்டுப் படுத்தல்.

(ii) தனியுரிமை நிலைமையினால் நுகர்வோருக்கு ஏற்படும் குறிப்பிட்ட சில நட்டங்களை நிவர்த்தி செய்தல்.

(iii) போட்டியெதிர்ப்பு நடவடிக்கைகளைத் தவிர்த்தல்.

(iv) குறிப்பிட்ட பொருட்கள் விற்பனையின் போது விலையினை நியாயப்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

(v) நுகர்வோரின் நலன்களைப் பாதுகாத்தல்;

(vi) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் நடவடிக்கைகளை அதிகரிப்பதன் மூலம் நுகர்வோருக்கு கிடைக்கக்கூடிய நன்மைகளை அதிகரித்தல்.

எந்த ஒரு அமைச்சும் அல்லது நுகர்வோர் சங்கம் குறிப்பிட்ட ஒரு பொருளுக்கு விலையை நிர்ணயிக்கும்படி இவ் ஆணைக்குழுவுக்கு சிபார்சு செய்யலாம். வர்த்தக கப்பற்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஏழு பேர் இக்குழுவில் அங்கம் வகிப்பர். கைத்தொழில்

சட்டம், வர்த்தகம், நிர்வாகம் ஆகிய துறைகளில் இருந்து கூடிய தகமை, அனுபவங்களைக் கொண்டவர்கள் தெரிவு செய்யப்பட்டு இக்குழுவுக்கு நியமிக்கப்படுவர்.

நுகர்வோர் பாதுகாப்புச் சங்கங்கள்
(Consumers Protection Societies)

கிராமசேவகர் மட்டத்தில் விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் தனது சேவைப் பிரதேசத்தில் இதற்கு என கூட்டத்தைக் கூட்டி நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் உருவாக்கப்படுகின்றது. இதன் ஆயுட் காலம் ஒரு வருடமாகும். இவ் அமைப்பு உள்நாட்டு வர்த்தக அமைச்சின் கீழ் இயங்குகின்றது. நுகர்வோர் நலன் தொடர்பாக பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

(i) தரமான பொருட்கள் இடைப்பதனையும், விற்பனை செய்யப்படுவதனையும் உறுதிசெய்தல் அதனை மேற்பார்வை செய்தல்.

(ii) நுகர்வோரின் பிரச்சினைகளைப் பிரதிநித்துவப் படுத்தல்.

(iii) நுகர்வோருக்குப் பயனுள்ள தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்,

(iv) நுகர்வோருக்கு அறிவூட்டல்

(v) நுகர்வோர் பிரச்சினைகட்குத் தீவுர் வழங்கல்.

(vi) நுகர்வோரின் முறைப்பாடுகளை ஆராய்ந்து அவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு அதனை அறிவித்தல்.

(vii) கூட்டுறவுச் சங்கங்கள், தனிவியாபார நிறுவனங்கள் ஆகிய வற்றின் முறை கேடுகள் ஊழல்களை அதிகாரிகளுக்கு அறிவித்தல்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
(Consumer Protection Act)

நுகர்வோர் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திற்கு இணங்க வியாபாரிகள் பின்வருவனவற்றினை நிறைவு செய்தல் வேண்டும்.

(i) விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு தொங்க விடப்படுதல் வேண்டும்,

(ii) நுகர்வோர் கேட்பின் பற்றுச் சீட்டினை வழங்குதல் வேண்டும்,

(iii) நிபந்தனையுடனான விற்பனையினைத் தவிர்த்தல் அதாவது ஒரு பொருளை கொள்வனவு செய்யும்போது இன்னொரு பொருளிற்கான கொள்வனவினை வற்புறுத்துவதனைத் தவிர்த்தல்.

(iv) பொருட்களை பதுக்கி வைத்தல் அல்லது வைத்துக் கொண்டு விற்கமறுப்பதனைத் தவிர்த்தல்.

(v) பொருட்களுக்கு விளம்பரம் செய்யும்போது விலை குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(vi) குழந்தைகள் பால்மா விளம்பரப்படுத்தலை தடை செய்தல்.

வதியாதோரின் அந்நிய நாணயக் கணக்கு

(NRF CA - Non Resident Foreign Currency Account)

ஆறு மாதத்திற்கு குறையாமல் வெளிநாடுகளில் வதிவுற்று இலங்கை திரும்பும் இலங்கைப் பிரஜை ஒருவர் அந்நிய நாணயத்தில் சேமிப்பு கணக்கினை ஆரம்பிக்க முடியும். இது இலங்கையில் வதியாதோரின் அந்நிய நாணயக்கணக்கு என அழைக்கப்படும். இத்தகைய கணக்கு ஒன்றினை வெளிநாட்டில் வதியும்போது அல்லது இலங்கைக்கு திரும்பி 90 நாட்களுக்குள் ஆரம்பிக்கமுடியும். இக் கணக்கு ஒன்றினால் ஒருவர் பெறும் நன்மைகளாவன,

(i) இக்கணக்கு அந்நிய செலவாணிக் கட்டுப்பாட்டில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(ii) கணக்கில் உள்ள தொகைக்கு வட்டி அந்நிய செலவாணியில் வழங்கப்படும்.

(iii) கணக்கினை வைத்திருப்பவர் இலங்கை திரும்பி 3 ஆண்டு கள்வரை கணக்கிலுள்ள மீதித் தொகை செல்வ வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(iv) சில வணிக வங்கிகள் இக் க/கு எதிராக மேலதிகப்பற்று கடன் வசதிகளை வழங்குகின்றன.

வதிவோர் அந்நிய செலாவணிக் கணக்கு

(RFCA - Resident Foreign Currency Account)

இலங்கையில் வதிவோரும் அந்நிய செலாவணியில் வணிக வங்கிகளில் கணக்கினை ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இக் கணக்கு ''வதிவோர் அந்நிய செலவாணிக் கணக்கு'' எனப் பெயர் கொண்டு அழைக்கப்படும் இக் கணக்கினை இரண்டு பகுதியினர் ஆரம்பிக்க முடியும்.

(i) இலங்கையில் வதியும் இலங்கையர் அல்லது வெளி நாட்ட வர்கள்.

(ii) வருடாந்தம் 5% அதிகரிப்பினைக் கொண்ட அந்நிய செலாவணியை உழைக்கின்ற ஏற்றுமதியாளர்.

வதிவோர் அந்நிய செலாவணிக் கணக்கினை ஆரம்பிப்பத னால் அந்நிய செலாவணியில் சேமிக்க முடியும், வட்டி உழைக்க லாம், வரிச்சலுகைகளையும் பெறலாம். இவ் கணக்கினை ஐ. அமரிக்க டொலர், ஸ்ரேலிங் பவுண், டியூச்மார்க், சுவிஸ் பிராங், பிரான்ஸ் பிராங், ஜப்பான் யென், அவுஸ்திரேலியா டொலர், நெதர்லாந்து கில்டர், நோர்வேஜின் குரோனர், சுவிடிஸ் குரோனர், ஆகிய நாண யங்களில் ஆரம்பிக்க முடியும்.

இலங்கை கட்டளைகள் நிறுவகம். (Sri Lanka Standard Institution)

இவ்வமைப்பு 1964ம் ஆண்டு 38ம் இலக்க இலங்கைக் கட்டளை கள் பணியகச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. 1984 ம் ஆண்டு 6ம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் கீழ் இலங்கை கட்டளைகள் நிறுவகம் என்ற பெயருடன் மாற்றி அமைக் கப்பட்டது. இவ் அமைப்பு கைத்தொழில் விஞ்ஞான அமைச்சின் கீழ் இயங்குகின்றது. இவ் நிறுவனத்தின் பிரதான நோக்கங்கள், தொழிற்பாடுகள் வருமாறு,

(i) உற்பத்திப் பொருட்களுக்கான நியமத்தை தயாரித்தல்

(ii) ஏற்றுமதிக்கு முன் பரிசோதனை வசதிகளையும் இறக்கு மதிப் பரிசோதனை வசதிகளையும் வழங்குதல்.

(iii) அறிமுகம் செய்யப்பட்ட நியமங்கள் பின்பற்றப்படுகிறதா என்பதனை பரிசீலனை செய்தல்.

(iv) இதனை மீறும் உற்பத்தியாளருக்கு எதிராக உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் ஊடாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(v) "நுகர்வோர் செய்தி" என்ற மும்மாத சஞ்சிகையை வெளி யீடுதல்,

(vi) தரத்தினை உறுதிப்படுத்தி சான்றிதழ்களை வழங்குதல்.

இது கட்டளைத் தருதிச் சான்றிதழ் என அழைக்கப்படும் இச் சான்றிதழைப் பெற்ற நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருட்களில் "SLS" என்ற அடையாளத்தினை இடலாம். SLS குறியுடைய உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் நுகர்வோர் பல நன்மைகளை அடைகின்றனர்.

(i) கொள்வனவினால் திருப்தி அடைதல்.

(ii) பொருட்களை தெரிவு செய்ய வசதியாயிருத்தல்

(iii) நியமதரத்தில் உற்பத்தி செய்யப்பட்டது என்பது உறுதிப் படுத்தப்படுகின்றது.

(iv) சட்டப்படி உரியதரம் இல்லாவிடின் பொருளைத் திருப்பிக் கொடுத்து நியம தரமுள்ள பொருளை வாங்க உரித்து டையவராக இருத்தல்.

ஏற்றுமதிக்கு முன்பான பரிசோதனை
(Fre Export Inspection)

இலங்கை கட்டளைகள் நிறுவனம் ஏற்றுமதி செய்யப்படும் சில, வகையான பொருட்களுக்கு, (உதாரணம்: பழங்கள். மரக்கறி, றபர் பொருட்கள்)

விருப்பத்தின் அடிப்படையில் ஏற்றுமதிக்கு முன்பான பரிசோ தனை சான்றிதழை வழங்குகின்றது. கொள்வனவாளர், தேசிய நியமம், சர்வதேச நியமம் என்பனவற்றின் தேவைகளைக் கருத்திற் கொண்டு இவ் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

இறக்குமதி பரிசோதனைத் திட்டம் (Import Inspection)

1986-ம் ஆண்டு யூன் மாதம் இலங்கை கட்டளைகள் நிறுவகத் தினால் சிலவகையான இறக்குமதிப் பொருட்களுக்கு தரப்பரிசோ தனை அறிமுகப்படுத்தப்பட்டது.

உதாரணம்!- தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், கட்டிப்பால், பழரசங்கள், வீட்டுப்பாவனை ஆழிகள். சூடாக்கும் தட்டு (Hot Plate) பழுப்புச் சீனி (Brown Sugar) தீப்பெட்டி, சீமெந்து.

இறக்குமதி செய்யப்படும் இப்பொருட்கள் இலங்கை நியம தரத் தினை ஒத்திருத்தல் வேண்டும். இல்லாவிடின் விற்பனைக்கு அனு மதிக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட பொருட்கள் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படு வதாயின் SLS குறியீட்டைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம்
(Colombo Stock Exchange)

1985-ம் ஆண்டு கொழும்பு தரகர் சங்க வியாபாரத் தளமும் பங்கு தரகர் சங்கமும் (Stock Brokers Association) ஒன்றிணைக்கப் பட்டு கொழும்பு பிணைகள் பரிமாற்று நிலையம் உருவாக்கப்பட்டது. இது உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட, ஒரு கம்பனியாகும்.

1990-ம் ஆண்டு இவ் அமைப்பு கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் எனப் பெயர் மாற்றப்பட்டது. இவ் அமைப்பு விலை கூறப்பட்ட கம்பனிகளுக்கு மூலதனத்தினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு திறமையான சந்தை ஒன்றினை செயற்படுத்துவதனை முதல் நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன் இவ் அமைப்பு தனது அங்கத்தவர்கள் விலை கூறப்பட்ட கம்பனிகள் என்பனவற்றிற்கு இடையே தொழில்சார் நியமத்தினை (Professional Standard) பேணுவதற்கும் பொறுப்பாகக் காணப்படுகின்றது. இவ் அமைப்பில் பங்குத் தரகர்கள் அங்கத்தவராகக் காணப்படுவர் இவ் அங்கத்தவர் விற்பனையாளர் கொள்வனர்களிற்கு இடையே இடை நிலையாளர் அலல்து தரகராக தொழிற்படுவார்கள். தற்போது 15 அங்கத்தவர்கள் கொழும்பு பரிவர்த்தனை நிலையத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

பங்குச் சந்தை வளர்ச்சி:- (Growth of the stock market)

குறிப்பாக 1989 முதல் அரசு பங்கு சந்தை வளர்ச்சி கருதி பின் வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

(1) முயற்சி மூலதனக் கம்பனி (Venture Capitaj Company) அலகு நம்பிக்கை நிதியங்கள் என்பனவற்றிற்கு வரி விடுதலை வழங்கப்பட்டமை.

(2) பங்குகள் விற்பனைக்குப் பின்னான ஆவண கொடுக்கல் வாங்கல்கள், பதிவுகள் என்பனவற்றினை மேற்கொள்ளும் பொருட்டு மத்திய வைப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டமை

(3) விலை கூறப்பட்ட பங்குகள் தொடர்பான விற்பனையில் மூலதன லாபவரி நீக்கப்பட்டமை

(4) செல்வவரி நீக்கப்பட்டமை,

(5) பங்குகள் கைமாற்றல் தொடர்பான நடவடிக்கைகளின் போது முத்திரை வரி நீக்கப்பட்டமை,

(6) வதியும் பங்குதாரர்களுக்கு விலை கூறப்பட்ட கம்பனிகள் மூலம் வழங்கப்பட்ட பங்கு இலாபங்கள் தொடர்பான பிடிப்பு வரி நீக்கப்பட்டமை.

(7) அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை தனியார் மயமாக்கியதன் மூலம் மொத்தப் பங்கு வழங்கலின் நிரம்பலை அதிகரித்தமை.

(8) பங்குகள் கொடுக்கல் வாங்கல் மூலம் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் அந்நிய செலாவணியை எடுத்து வரும் பொருட்டு வணிக வங்கிகளில் விசேட கணக்குகளைத் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டதுடன், செலவாணிக்கட்டுப்பாடும் நீக்கப்பட்டமை.

(9) ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய அமரிக்க உதவி வழங்கும் நிறுவனம் (USAID) ஆகிய அமைப்புக்களின் நிதி உதவியுடன் மூலதனச் சந்தையின் அடிப்படை வசதிகளை விருத்தி செய்யும் நோக்குடன் திட்டம் உருவாக்கப்பட்டமை. இதன் மூலம் பங்குச்சந்தையில் முதலீடுசெய்வதனால் ஏற்படும் அனுகூலங்கள் பற்றி நாடு பூராவும் அறிவூட்டும் நிகழ்சிகளும், பிரச்சார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டமை

(10) ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய அமரிக்க உதவி வழங்கும் ஸ்தாபனம் ஆகிய அமைப்புகளின் நிதி உதவியுடன் மூலதன சந்தையின் அடிப்படை வசதிகளை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை.

பிணைகள் மாற்று ஆணைக்குழு
(SEC - Securities Exchange Commission)

1987-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாரளுமன்றச் சட்டத்தின் கீழ் பிணைகள் பேரவை (Securities Council) உருவாக்கப்படது. இவ் அமைப்பு இலங்கையில் மூலதனச் சந்தையை ஒழுங்குபடுத்துவதற்கு பொறுப்பான அமைப்பாகக் காணப்படுகின்றது.

1991-ம் ஆண்டு ஜுன் மாதம் இவ்வமைப்பின் பெயர் ' பிணைகள் மாற்று ஆணைக்குழு " என மாற்றி அமைக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கங்களாவன,

(1) நியாயமான முறையிலும், ஒழுங்காகவும் பிணைகள் சந்தையைப் பேணல்.

(2) முதலீட்டாளர்களின் நிதி நலன்களைப் பாதுகாத்தல்:

(3) பிணைகள் சந்தையை ஒழுங்குபடுத்தலும் சந்தையில் தொழில்சார் நியமத்தினைப் (Professional Standards) பேணுதலும்.

(4) தரகர்களின் செயற்பாடுகளினால் முதலீட்டாளர்களுக்கு ஏற்படும் நட்டத்திற்கு ஈடு பெற்றுக்கொடுத்தல்.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடையும் பொருட்டு பிணைகள் மாற்று ஆனைக்குழுவிற்கு பின்வரும் அதிகாரங்கள், கடமைகள் செயற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

(1) அனுமதி அளிக்கும் அதிகாரம் (Licensing Power)
(2) ஒழுங்கு படுத்தும் அதிகாரம் (Regulatory Power)
(3) கட்டுப்படுத்தும் அதிகாரம் (Controlling Power)
(4) ஆலோசனை வழங்கும் அதிகாரம் (Advisory Power)
(5) பரிசிலனை செய்யும் அதிகாரம் (Examining Power)

அனுமதி அளிக்கும் அதிகாரம்:-

பிணைகள் மாற்று ஆனைக்குழு பங்குத்தரகர்கள், அலகு நம்பிக்கை நிதியம் என்பனவற்றிற்கு அனுமதி வழங்கும்.

(2) ஒழுங்கு படுத்தும் அதிகாரம்:

பங்கு பரிவர்த்தனை நிலையம், அலகு நம்பிக்கை நிதியம் என்பனவற்றிற்கு அறிவுறுத்தல்களை வழங்கும் அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. இதன் மூலம் இவ் அமைப்புக்கள் சரியான முறையில் தொழிற்படுவது உறுதிபடுத்தப்படுகின்றது.

(3) கட்டுப்படுத்தும் அதிகாரம்;

முதலீட்டாளர்களின் நன்மை கருதி அவர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் ஏதேனும் முறையற்ற நடவடிக்கைகள் குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கலின்போது காணப்படின், அவ் பங்கு மாற்றங்களை ரத்துச் செய்யும் அதிகாரத்தினைக் கொண்டுள்ளது.

(4) ஆலோசனை வழங்கும் அதிகாரம்.

ஆவண சந்தையினை (Securities) அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரசுக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரத்தினையும் கொண்டுள்ளது.

(5) பரிசீலனை செய்யும் அதிகாரம்.

பிணைகள் மாற்று ஆணைக்குழு பங்கு தரகர்கள், அலகு நம்பிக்கை நிதியங்கள், விலை கூறப்பட்ட கம்பனிகள் என்பனவற்றின் வியாபார நடவடிக்கைகளைப்பற்றி விசாரணை செய்வதற்கும், புத்தகங்களைப் பரிசீலனை செய்வதற்கும் அதிகாரத்தினைக் கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அதிகாரங்களைப் பிணைகள் மாற்று நிலையம் கொண்டுள்ளதால் தனது நோக்கத்தினை அடையக் கூடியதாக உள்ளது.

பிணைகள் மாற்று ஆணைக்குழு விலைகள் கூறப்பட்ட கம்பனிகளின் முதலிட்டாளர்களின் நன்மைக்காக பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது.

(1) பங்குக் கொடுக்கல் வாங்கலில் ஏற்படும் நட்டத்திற்கு ஈடு பெற்றுக் கொடுத்தல்.

(2) பங்காளர் நன்மைகட்காக முறையற்ற பங்கு மாற்றங்களை ரத்துச் செய்தல்.

(3) விலை கூறப்பட்ட கம்பனிகளின் தவறான நடத்தைகள் பற்றி பிரசித்தப்படுத்தல்;

அலகு நம்பிக்கை நிதியம் அல்லது அலகுப் பொறுப்பாட்சி நிறுவனம் (Unit Trust)

அலகுகளை (Units) விற்பனை செய்வதன் ஊடாக பொதுமக்களிடம் இருந்து நிதியைத் திரட்டி உருவாக்கப்பட்ட அமைப்பு அலகு நம்பிக்கை நிதியம் எனப்படும். இவ் நிதியத்திலுள்ள பணம் விலை கூறப்பட்ட கம்பனிகள் போன்றவற்றில் முதலீடு செய்யப்பட்டு, பெற்றுக் கொள்ளப்பட்ட லாபமானது அலகுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பகிர்ந்து வழங்கப்படும்.

ஒரு அலகு நம்பிக்கை நிதியத்துடன் மூன்று பகுதியினர் தொடர்புடையவர்கள்.

(அ) அலகுகளை கொள்வனவு செய்து வைத்திருப்போர் (Unit Holders) அல்லது அலகு உடமையாளர்.

(ஆ) நம்பிக்கை முகாமையாளர்கள் (Trust Managers) அல்லது நிதி முகாமையாளர்கள்.

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளர் (Trustees)

இம் மூன்று பகுதியினருக்கும் இடையிலான தொடர்புகள், ஒழுங்குகள் என்பன ஒரு ஆவணம் மூலம் எடுத்துக் கூறப்படும். இது நம்பிக்கை உறுதி (Trust Deed) என அழைக்கப்படும். இவ் நம்பிக்கை உறுதியில் பின்வரும் விடயங்கள் எடுத்துக் கூறப்படும்,

(1) அலகுகளைக் கொள்வனவு செய்தோர்கள் அதாவது நிதியத்தில் முதலீடு செய்தவர்களின் நலன்கள்.

(2) நம்பிக்கை முகாமையாளர், நம்பிக்கைப் பொறுப்பாளர் ஆகியோரின் கடமைகள்.

(3) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நிதியை முதலீடு செய்யக் கூடிய துறைகள்.

(4) அலகு நம்பிக்கை நிதியம் தொழிற்படும் நடை முறைகள் என்பனபற்றி எடுத்துக் கூறப்பட்டிருக்கும்.

இலங்கையில் அலகு நம்பிக்கை நிதியம் உருவாக்கப் பட்டதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கும், அலகுகளைக் கொள்வனவு செய்வோருக்கும் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட நன்மைகளாவன,

(1) பரந்துள்ள சிறிய சேமிப்புக்களை ஒன்று திரட்டப்படுகின்றது. இதன் மூலம் உள்நாட்டு சேமிப்புகளை ஒன்று திரட்டும் வீதம் அதிகரிக்கப் படுகின்றது.

(2) அலகுகளைக் கொள்வனவு செய்வோர் பெரும்பாலும் குறைவான வருமான மட்டத்தினைக் கொண்ட சிறிய சேமிப்பாள

ராகக் காணப்படுவதனால் அவர்களும் கம்பனியில் பங்குக ளைக்கொள்வனவு செய்வதற்கான வசதி அளிக்கப்படுகின்றது இதன் மூலம் வருமானப் பங்கீடு தொடர்பான சமமின் மையை நீக்க முடிகின்றது.

அலகு நம்பிக்கை நிதியத்தில் மூதலீடு செய்பவர்கள் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(i) பங்குகளைக் கொள்வனவு செய்ய முடியாது உள்ள சிறிய சேமிப்பாளர்களுக்கும், அலகு நம்பிக்கை நிதியம் ஊடாக கம் பனியின் பங்குகளின் உடமையாளராக வருவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

(ii) பங்குச் சந்தை தொடர்பான எவ்வித அறிவினையும் கொண் டிராதவர்கள் கூட பங்குகளில் மூதலீடு செய்ய முடியும்.

(iii) அலகு நம்பிக்கை நிதியத்தின் மூலம் வழங்கப்படும் இலவச தகவல்கள், கல்வி திட்ட நிகழ்ச்சிகள் என்பன ஊடாக முதலீட்டாளர்கள் தமது அறிவினை விருத்தி செய்ய கூடிய தாக உள்ளது.

(iv) முதலீட்டாளரின் முதலீடுகள் தொடர்பான ஆபத்துக்களும் குறைக்கப்படுகின்றது.

இலங்கையில் பிணைகள் மாற்று ஆணைக்குழு சட்டத்தின் கீழ் அலகு நம்பிக்கை நிதியங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இவற்றிற்கு அனுமதி வழங்கல், கட்டுப்படுத்தல், ஒழுங்கு படுத்தல் என்பனவற் றிற்குப் பொறுப்பாக இலங்கை பிணைகள் மாற்று ஆணைக்குழு காணப்படுகின்றது தற்போது இலங்கையில் நான்கு அலகு நம்பிக்கை நிதியங்கள் தொழிற்படுகின்றன. அவையாவன,

(i) National Equity Fund.
(ii) Pyramid Unit Trust.
(iii) Ceybank Unit Trust
(iv) Comtrust Equity Fund,

மக்கள் மயப்படுதல் *(Peoplisation)*

அரசதுறைக்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் உடமைகளை தனியார் துறையிடம் கையளிப்பது தனியார் மயமாக்கல் என அழைக்கப்படுகின்றது. தனியார் மயமாக்கப்பட்ட தொழில் முயற் சிகளில் பொதுமக்களுக்கு பங்குகளை வழங்கும்போது அது மக்கள் மயப்படுத்தல் என அழைக்கப்படுகின்றது. பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட 1987ம் ஆண்டு 23-ம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையிலுள்ள பொதுக் கூட்டுத் தாபனங்கள், அரசினால்

சுவீகரிக்கப்பட்ட கம்பனிகள் என்பன வரையறுக்கப்பட்ட பொதுக்கம்ப னிகளாக மாற்றப்படுகின்றன. இதன்மூலம் பின்வரும் நன்மைகள் பெற்றுக் கொள்ளப்பட முடியும்:

(1) அரசாங்கத்தின் நிதிச்சுமையினைக் குறைத்துக் கொள்ள முடியும்.

(2) சிறந்த முகாமையினை ஏற்படுத்த முடியும்.

(3) அரசியல் தலையீடுகளைக் குறைத்து சுதந்திரமான அமைப் பாக இயங்க முடியும்.

(4) வெளிநாட்டு முதலீடுகள் உடமையில் பங்கு கொள்வதனை ஊக்குவிக்க முடியும். அத்துடன் நவீன தொழில் நுட்பத் தினை அறிமுகப்படுத்தவும், இதன் ஊடாக உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளவும் முடியும்.

(5) அரசாங்கத்தின் உடமையை பரவலாக்கவும் அதன்மூலம் மக்கள் பங்குகளை கொள்வனவு செய்யவும் முடியும்.

மக்கள் மயப்படுத்தல் திட்டத்தில் உடமைகளைப் பரவலாக்கும் போது மூன்று வகுதியினர் அதில் உடமையாளராகின்றனர்.

(i) கூட்டு முதலீட்டாளர் அதாவது உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்குகளை கொள்வனவு செய்யலாம். 60% மான பங்குகளை இவர்கள் கொள்வனவு செய்வர்.

(ii 10%மான பங்குகளை ஊழியர்களுக்கு இலவசமாக வழங்கல். அவர்கள் சேவை புரிந்த காலத்தின் அடிப்படையில் வழங் கப்படும்.

(iii) 30% மான பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படும்;

இலங்கை போக்கு வரத்துச் சபை மக்கள் மயமாக்கல்.

1990-ம் ஆண்டு யூன் 1-ம் திகதி இலங்கைப் போக்கு வரத்துச் சபையினை மக்கள் மயமாக்கல் அறிமுகப் படுத்தப்பட்டது. இதன் மூலம் ஊழியர்களுக்கு இலவசமாக பங்குகளை வழங்கி அவர்களை உடமையாளராக மாற்றுவதே பிரதான நோக்கமாகும். இத் திட் டத்தின் கீழ் ஆரம்பத்தில் 50% மான பங்குகள் ஊழியருக்கு இல வசமாக வழங்கப்படும். எஞ்சியது தேசிய சேமிப்பு வங்கி, ஊழியர் நம்பிக்கை நிதியம், அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனம் ஆகியதிதி நிறுவனங்களின் நம்பிக்கை பொறுப்பில் வைக்கப்படும். 3—5 வருடங்களுக்கு இடையில் இப் பங்குகளும் ஊழியர்களுக்கு கைமாற்றப் படும். இதன் மூலம் டிப்போக்களைச் சேர்ந்த ஊழியர்கள் 100% உடமையாளராக முடியும்.

தேசிய போக்கு வரத்து ஆணைக்குழு (National Transport Commission)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பயணிகள் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தும் பொருட்டு 1991-ம் ஆண்டு இறுதியில் நடைமுறைக்கு வந்தது. ,ஒரு சிறந்த போட்டிச் சூழலில் திறமையானதும், பாதுகாப்பானதுமான போக்கு வரத்தினை அபிவிருத்தி செய்து பொதுமக்களின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டது. இவ் ஆணைக்குழுவின் அடிப்படை தொழிற்பாடு பாதை பயணிகளின் போக்குவரத்து சம்பந்தமான தேசிய கொள்கை பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கி அக் கொள்கையை நடைமுறைப் படுத்தலாகும். இவ் ஆணைக்குழு கொள்கை வழிப்படுத்தல்களை நடைமுறைப் படுத்த பின்வருவனவற்றை மேற்கொள்கின்றது.

(1) சாரதி வாகனம் என்பவை தகுதி சம்பந்தமான ஆவணங்களைக் குறிப்பிடுதல்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களினால் பஸ் போக்குவரத்தினை நடாத்துவதற்கு பாதை அனுமதியினைவழங்க நிபந்தனைகளை விதித்தல்.

(3) பாதை அனுமதிக்கு அறவிடப்படும் கட்டணத்தை தீர்மானித்தல்.

(4) தரமான பஸ் போக்குவரத்து தொடர்பான கிடைப்பனவினை மதிப்பீடு செய்தல்.

இவ் ஆணைக்குழு பயணிகள் போக்குவரத்தின் தேசிய கொள்கை தொடர்பாக அதனை நடைமுறைப்படுத்தும் பொருட்டு வழிகாட்டல்கள், விளக்க விபரங்களைத் தயாரிக்கின்றது. பஸ் போக்குவர்த்து தொடர்பான வழிகாட்டுதல்களை மாகாணசபை ஆணைக் குழுவின் வழிகாட்டலின் கீழ் நிறைவேற்றும்,

கப்பல் மாநாடுகள் (Shipping Conferences)

வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த பாதை நிர்ணயிக்கப்பட்ட கப்பல் சேவையை நடத்தும் கப்பல் கம்பனிகள் தமது நலன்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கிய அமைப்பு மாநாடுகள் எனப்படும். இவ் கப்பல் மாநாடுகள் காலத்திற்கு காலம் வெவ்வேறு நாடுகளில் நடாத்தப்படும். இவ்மகாநாடு பின்வரும் விடயங்களில் கவனத்தினைச் செலுத்துகின்றது.

(i) பாதை நிர்ணயிக்கப்பட்ட கப்பல்களுக்கான பாதைகளை நிர்ணயித்தல்.

(ii) கப்பல் கம்பனிகளுக்கு இடையிலான பிணக்குகளை தீர்த்தல்.

(iii) சீரான குறைந்த கப்பல் கட்டணத்தினை நிர்ணயித்தல் இதன்மூலம் ஒழுங்கான சேவையை மேற்கொள்ளும் பொருட்டு சரக்கு கிடைப்பதனை உறுதிப்படுத்தல்.

(iv) கப்பல் கம்பனி உடமையாளர்கள் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகளைக் கலந்து ஆலோசித்தல்.

(v) கப்பல் கட்டணம் தொடர்பான ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்.

மத்திய கேள்வுப்பணியகம் (Central Freight Bureau)

இலங்கை மத்திய கேள்வுப் பணியகம் கப்பல் போக்குவரத்துடன் தொடர்புடைய பிரதான அமைப்பாகும். இதன் பிரதான செயற்பாடுகளாவன,

(i) கப்பல்களில் இடவசதிகளை ஒதுக்குதல்.

(ii) கப்பல் வந்தடையும் புறப்படும் நேரங்களை அறிவித்தல்.

(iii) கப்பற்கட்டணங்களை ஆகக் குறைந்த நிலைக்குக் கொண்டு வருவதற்காகக் கப்பல் கம்பனிகளுடன் கலந்துரையாடல்

(iv) கப்பல் முகவர்களைப் பதிவு செய்தலும், அவர்களைக் கட்டுப்படுத்தலும்.

(v) இலங்கைத் துறைமுகங்களில் இருந்து செல்லும் கப்பல்களுக்கு போதிய சரக்குகளை வளங்குதல்.

(vi) துறைமுகத்திற்கு போதிய கப்பல் வருவதனை உறுதிப்படுத்தல்.

(vii) வெளிநாட்டுக்கப்பல் கம்பனிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தல்.

(viii) கப்பல்களின் தாமதங்களைத் தடுத்தல்.

கப்பல் முகவர் நிலையம் (Shipping Agent)

கப்பல் ஒவ்வொரு நாட்டிற்கும் செல்லும்போது அந்நாட்டில் கப்பல்களினதும், மாலுமிகளினதும் சகல நலன்களையும் கவனிக்கும் பொருட்டு கப்பல் கம்பனியினால் நியமிக்கப்படும் நிறுவனம் கப்பல் முகவர் நிலையம் எனப்படும்.

கப்பல் முகவர் நிலையத்தின் பிரதான தொழிற்பாடுகளாவன.

(i) கப்பலுக்குத் தேவையான நீர், எண்ணை விநியோகம் செய்தல்.

4

(ii) கப்பல் குறிப்பிட்ட நாட்டை வந்தடைந்ததும் மாலுமிகளுக்குத் தேவையான உணவு உட்பட சகல நலன்களையும் கவனித்தல்.

கொள்கலன் கப்பல் (Container Ship)

கொள்கலன் எனப்படுவது இரும்பு அல்லது உருக்கிலான அறை போன்ற அமைப்பிணைக் குறிக்கும். பெருமளவு பொருட்களை கப்பல் மூலம் ஒரே தடவையில் அனுப்புவதற்கு இவை பயன்படுத்தப்படும். அனுப்பவேண்டிய பொருட்களைக் கொள்கலனில் இட்டு கப்பல்மூலம் அனுப்பலாம். இது கொள்கலன் கப்பல் சேவை எனப்படும். பெருமளவு கொள்கலன்களை எடுத்துச் செல்லக் கூடிய முறையில் கப்பல் அமைக்கப்பட்டிருக்கும். கொள்கலன் முறையினைப் பயன்படுத்துவதனால் பல அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

(i) கொள்கலனில் பொருட்கள் இடப்பட்டு, சீல்வைக்கப்பட்டு கப்பல்மூலம் அனுப்பப்படும். இதனால் இது பாதுகாப்புக் கூடியதாகும்.

(ii) கொள்கலனில் பொருட்கள் இடப்பட்டு அனுப்பப்படுவதனால். தனித்தனி பொருட்களுக்குப் பொதிகட்ட வேண்டியதில்லை.

(iii) பொருட்களை ஏற்றி இறக்குவது சுலபம்.

(iv) கொள்கலன்களைக் களஞ்சியமாகவும் பயன் படுத்தமுடியும்:

தற்போது கொள்கலன் கப்பல் சேவை பிரபல்யம் அடைந்துள்ளது.

(1) வசதியாக விரும்பிய இடத்தில் ஏற்ற இறக்கக்கூடிய வசதிகளை கொண்டிருப்பது.

(2) துறைமுகங்கள் விஸ்தரிக்கப்பட்டு கொள்கலனை கையாளும் வசதி காணப்படுதல்.

(3) அழிவு, சேதங்கள் என்பன குறைவாகக் காணப்டுதல்.

மேற் குறிப்பிட்ட காரணங்களால் தற்போது கொள்கலன் கப்பல் சேவை பிரபல்யம் அடைந்துள்ளது: கொள்கலன்கள் தேவைப்படுவோர் அதனை வாடகைக்குப் பெற்றுக் கொள்ள முடியும். கொள்கலன் தேவைப்படுவோருக்கு அதனை வாடகைக்கு விடும் பொருட்டு கொள்கலன்களைக் களஞ்சியப்படுத்தியிருக்கும் இடம். கொள்கலன்சாலை எனப்படும்.

விமானநிலைய விமானப் போக்குவரத்துச் சேவைகள் லிமிட்டெட் (Airport And Aviation Services Ltd)

இது விமானப் போக்குவரத்துடன் தொடர்புடைய அமைப்பாகும். இது பின்வரும் செயற்பாடுகளை மேற் கொள்ளுகின்றது.

(i) விமான நிலையத்தினைப் பாதுகாத்தல்.

(ii) விமானநிலைய கட்டிடம், ஓடும்பாதை. போன்றவற்றை அபிவிருத்தி செய்தல்.

(iii) பொருட்களை ஏற்றி இறக்க உதவுதல்.

(iv) தீயணைப்புச் சேவைகளை வழங்குதல்.

(v) விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல்

(vi) சிற்றுண்டிச்சாலை தீர்வையற்ற கடைத் தொகுதிகளை நிர்வகித்தல்.

(vii) நிறுக்க அளக்க கருவி வசதிகளை வழங்கல்.

பாதை நிர்ணயிக்கப்பட்ட கப்பலும்; பாதை நிர்ணயிக்கப் படாத கப்பலும் (Liner and Tramp)

பாதை நிர்ணயிக்கப்பட்ட கப்பல் அல்லது லைனர் எனப்படுவது இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட துறைமுகங்களுக்கு இடையில் ஒழுங்கான நேர அட்டவணைப்படி முன் கூட்டியே நிர்ணயிக் கப்பட்ட பாதை வழியே சேவையை நடத்தும் கப்பலைக் குறிக்கும்.

பாதை நிர்ணயிக்கப்படாத கப்பல் அல்லது "ட்ராம்ப்" எனப் படுவது ஒழுங்கான நேர அட்டவணைக்கு அமையவோ, முன்கூட்டி நிர்ணயிக்கப்பட்ட பாதைகள் வழியே சேவையை நடத்தாத கப்பல் களைக் குறிக்கும். இவ் வகையான கப்பல்களுக்கு இடையில் பின் வரும் வேறுபாடுகள் உண்டு.

(i) பாதை நிர்ணயிக்கப்பட்ட கப்பல்கள் ஒழுங்காக இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட துறைமுகங்களிற்குஇடையில் சேவையை நடத்தும். பாதை நிர்ணயிக்கப்படாத கப்பல்கள் பொருட்களை ஏற்றி இறக்கும் தேவைகளிற்கு ஏற்ப பாதை யினை நிர்ணயித்துக் கொள்ளும்.

(ii) பாதை நிர்ணயிக்கப்பட்ட கப்பல் முன் கூட்டியே நிர்ணயிக் கப்பட்ட நேர அட்டவணைக்கு அமைய, முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட பாதை வழியே சேவையை நடத்தும். ஆனால் பாதை நிர்ணயிக்கப்படாத கப்பல் அவ்வாறில்லை

(iii) பாதை நிர்ணயிக்கப்பட்ட கப்பல் பயணிகள் கப்பலாகவோ அன்றி சரக்குக் கப்பலாகவோ காணப்படலாம். ஆனால் பாதை நிர்ணயிக்கப்படாத கப்பல் சரக்குக் கப்பலாகவே காணப்படும்.

(iv) பாதை நிர்ணயிக்கப்பட்ட கப்பல்களில் கட்டணங்கள் நிர் ணயிக்கப்பட்டிருக்கும். நிலையானது. ஆனால் பாதை நிர்ணயிக்கப்படாத கப்பல்களில் கட்டணங்கள் பேரம்பேசல் மூலம் தீர்மானிக்கப்படும்.

(v) பாதை நிர்ணயிக்கப்பட்ட கப்பல்கள் கப்பல் மகாநாடுக ளில் பங்கு கொள்ளும். ஆனால் பாதை நிர்ணயிக்கப்படாத கப்பல்கள் கப்பல் மாநாடுகளில் பங்கு கொள்வதில்லை.

போக்குவரத்து தொடர்பான அபிவிருத்தி

வீதிப் போக்குவரத்து தொடர்பாக அண்மைக் காலங்களில் பின்வரும் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டன.

(1) வாகனங்களை இனங்காணவும், இலக்கங்களை துலக்கமாக அறியவும் 'இலக்கத் தகடுகள், நியம அளவு என்பனவற் றின் அடிப்படையில் வேறுபடுத்தல்.

(2) பெருந்தெருக்களில் சர்வதேச பாதைக் குறியீடுகள் அறி முகப் படுத்தப்பட்டமை.

(3) வெளிநாட்டு உதவியுடன் நெடுஞ்சாலைகள் புனரமைக்கப் பட்டமை.

(4) சாரதி அனுமதிப் பத்திரங்கள் அடையாள அட்டைவடிவில் வழங்க நடவடிக்கை எடுத்தமை.

புகையிரதப் போக்குவரத்து தொடர்பாக பின்வரும் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டன.

(1) மருதானையிலிருந்து இறாகமை வரைக்குமான மூன்றாவது புகையிரதப்பாதை நிர்மாண வேலை மேற்கொள்ளப்படு கின்றது.

(2) நகர்ப்புற பகுதி புகையிரதசேவை மின்சாரமயமாக்கப் பட வுள்ளது. இச் செயற்திட்டத்தினை மேற்கொள்ள நன் கொடை உதவி கோரப்பட்டுள்ளது.

(3) மட்டக்களப்பிற்கும் பொத்துவிலுக்கும் இடையே புகையி ரதப் பாதை நீடிப்பு சம்பந்தமான அளவீட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

(4) புகையிரதத் திணைக்களம் ஒரு அதிகார சபையாக மாற்றப் பட்டுள்ளது மறுசீரமைக்க நடைமுறைத் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

(5) புகையிரதப் போக்குவரத்தில் காணப்படும் நெருக்கடியி னைக் குறைக்கும் பொருட்டு நெருக்கடியற்ற நேரங்களில் சலுகைக் கட்டணங்களில் பிரயாணம் செய்ய வசதி அளிக் கப்பட்டது.

கப்பல் போக்குவரத்து தொடர்பாக பின்வரும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கப்பல் கூட்டுத்தாபனம் ஒருகம்பனியாக மாற்றப்பட்டுள்ளது.

(ii) கொழும்பு டொக்கியாட் லிமிடெட், உலர் டொக்ஸ் லிமிட் டெட் என்பன வெளிநாட்டு முதலீட்டாளருடன் இணைப்பு முயற்சியை உருவாக்கியுள்ளது

(iii) கொழும்பு துறைமுகத்தினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பெருந்திட்டம் (1990-1994) தயாரிக்கப்பட்டு செயற் படுத்தப்படுகின்றது.

(iv) ஜெயா கொள்கலன் இலங்குதுறை 1-ம், 2-ம் கட்டங்கள் ஜப்பானிய உதவியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. 3-ம் கட்டம் நிறைவேறும் நிலையிலும், 4-ம் கட்டம் 1996-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விமானப் போக்குவரத்து தொடர்பாக பின்வரும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கட்டுநாயக்காவில் நடைமுறையில் இருக்கும் அடிப்படை ராடர்ரோடு, மத்திய மலைநாட்டில் பீதுருதாலகாலாவில் இரண்டாவது கண்காணிப்பு ராடர் ஒன்று நிறுவப் பட்டுள்ளது.

(ii) ஏயர்லங்கா நிறுவனம் பல நாடுகளிற்கு இடையே நேரடி விமான சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

(iii) மிகவும் தாராளமயமான இருபுடை விமான ஒப்பந்தங்கள் சிங்கப்பூர், ஜேர்மனி, இந்தியா, அவுஸ்திரேலியா நாடு களுடன் செய்யப்பட்டன.

(iv) ஹிங்குரான் கொடையில் விமான நிலையம் ஒன்று நிர்மா ணிக்கப்படவுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களம்
(Motor Traffic Department)

மோட்டார் போக்குவரத்திற்கு பொறுப்பாக இத்திணைக்களம் காணப்படுகின்றது. இத்திணைக்களத்திற்குப் பொறுப்பாக மோட் டார் வாகனப் பதிவாளர் பணிபுரிவர். இத் திணைக்களம் பின் வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது. அவையாவன,

(1) சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்.
(2) புதிய வாகனங்களுக்கு இலக்கங்கள் வழங்கல்.
(3 வருடாந்தவரி அனுமதிப்பத்திரம் வழங்கல்
(4) வாகனங்களை உரிமை மாற்றிக் கொடுத்தல்.

இலங்கை மோட்டார் போக்குவரத்துச் சங்கம் (Automobile Association of Ceylon)

இலங்கையில் பெருந் தெருக்களில் இயங்கும் மோட்டார் வாகனச் சொந்தக்காரரின் நலம்பேணும் நோக்குடன் அவர்கள் சார்பாகப் பிரதிநிதித்துவம் மேற்கொள்ளும் பொருட்டு இது உருவாக்கப்பட்டது. இதன் பிரதான தொழிற்பாடுகள்.

(i) மழை, மண்சரிவு போன்றவற்றால் துண்டிக்கப்பட்ட பாதைகள் பற்றி பெருந்தெருக்கள் திணைக்களத்திற்கு அறிவித்தல்;

(ii) பெருந்தெருக்களின் குறைபாடுபற்றி அரசுக்குக் காரணங்கள் எடுத்துக் கூறல்.

(iii) மோட்டார் வாகன பொலிசாருக்கு உதவுதல்.

(iv) சர்வதேச சாரதிகள் அனுமதிப் பத்திரம் வழங்குதல்.

(v) விபத்தை உருவாக்கும் மார்க்கங்கள், பாலங்கள் பற்றி பணிப்பாளருக்கு அறிக்கை அளித்தல்.

பிரயாண முகவர் நிலையம் (Travel Agency)

வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொள்பவர்களுக்கு பிரயாண ஒழுங்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நிலையங்கள் பிரயாண முகவர் நிலையம் அல்லது விமானப் பயண முகவர் நிலையம் என அழைக்கப்படும். இவ் நிறுவனம் பின்வரும் தொழிற்பாடுகளை மேற் கொள்கின்றன,

(i) விமான சேவைகள் சம்பந்தமான நேர அட்டவணை பற்றிய தகவல்களை வழங்குதல்;

(ii) விமான டிக்கற்றை வழங்குதல். ஆசனங்களை ஒதுக்குதல் பதிவுகளை இரத்துச் செய்தல்.

(iii) விமானடிக்கற் மீளளிப்புத் தொகையினைப் பெற்றுக் கொடுத்தல்;

(iv) போக்கு வரத்து வசதிகளை வழங்குதல்.

தொழில் உறவு (Labour Relation)

ஒரு நிறுவனத்தில் தொழில் தருனர், தொழில் பெறுநர்களுக்கு இடையில் தொழில் ரீதியாக காணப்படும் உறவு தொழில் உறவு என அழைக்கப்படுகின்றது; அல்லது முதலாளி தொழிலாளிகளுக்கு இடையில் தொழில் ரீதியாக ஏற்படும் உறவினை தொழில் உறவு எனவும் அழைக்கப்படலாம். இவ் உறவானது சுமூகமற்ற நிலையி

லும் காணப்படலாம். உறவானது சமூகமற்றுக் காணப்படும் நிலை "கைத்தொழில் பிணக்கு" என்ற பெயர் கொண்டு அழைக்கப்படும். கைத்தொழில் பிணக்கு எனப்படுவது தொழில் தருனர், தொழில் பெறுநர்களுக்கிடையில் அல்லது முதலாளி தொளிலாளிகளுக்கு இடையில் தொழில் ரீதியாக ஏற்படும் முரண்பாடு அல்லது பிணக்குகளைக் குறிக்கும். பொதுவான பின்வரும் காரணங்கள் தொழில் பிணக்கிற்கு வழிவகுக்கின்றன.

(1) நியாயமற்ற முறையில் சம்பளம் வழங்குதல்.
(2) தொழிலாளர்கள் கடுமையாக நடத்தப்படுதல்.
(3) தொழிலாளர் அனுபவித்த உரிமைகளைப் பறித்தல்.
(4) நியாயமற்ற முறையில் பதவி உயர்வுகள், நியமனங்களை வழங்குதல்.
(5) தொழிலாளர்களின் பொதுவான நலன்கள், உரிமைகளைப் பாதிக்கக் கூடிய முறையில் சட்டங்களை உருவாக்குதல்.

நிறுவனத்தில் ஏற்படும் தொழில் பிணக்கு பின்வரும் பிரதிகூலங்களை ஏற்படுத்தும்.

(1) தொழிலாளர்களுக்கு வேலைமீதுள்ள திருப்தியினைக் குறைக்கும்.
(2) தொழிலாளர் புரள்வு வீதம் அதிகரிக்கும்.
(3) நிறுவனத்தின் நன்மதிப்பு பாதிப்படையும்.
(4) உற்பத்தி தடைப்படும், நிறுவனத்தின் இலாபம் குறைவடையும். உற்பத்தியின் தரம் பாதிப்படையும்.
(5) தொழில் பிணக்குகள் வேலை நிறுத்தத்திற்கு வழிகோலும்.

தொழிற் சங்கம் (Trade Union)

ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் தமது நலன்களைப் பேணுவதற்காகவும், தொழில் சார்ந்த பாதுகாப்புக்களை ஏற்படுத்தும் பொருட்டும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பே தொழிற்சங்கம் எனப்படும். ஒரு தொழிற்சங்கம் ஒன்றை உருவாக்க குறைந்தது ஏழு (7) தொழிலாளர்கள் காணப்படுவது அவசியமாகும். 1935-ம் ஆண்டு 14-ம் இலக்க தொழிற்சங்கச் சட்டத்தின் கீழ் தொழிற்சங்கம் ஒன்றினைப் பதிவு செய்யலாம். தொழிற் சங்கத்தினைப் பதிவு செய்வதும், கட்டுப்படுத்துவதும் இச் சட்டத்தின் குறிக்கோளாகும். நீதித்துறை அதிகாரிகள், நாட்டின் பாதுகாப்புச் சேவையில் உள்ளவர்கள் தொழிற் சங்கம் ஒன்றினை அமைக்க முடியாது. தொழில் சங்கம் ஒன்று பதிவு செய்யப்படும்போது அது பதிவு செய்யப்பட்ட தொழில் சங்கமாகக் கருதப்படுவதுடன், சட்ட அந்தஸ்தையும் பெற்றுக் கொள்

கின்றது. தொழிற் சங்கம் ஒன்றினை தொழில் திணைக்களத்தில், தொழில் ஆணையாளரினால் பதிவு செய்து கொள்ளப்படும்.

தொழிற் சங்கம் ஒன்றிற்கு தலைவர், செயலாளர் பொருளாளர் ஆகியோர் காணப்படுவார்கள். அத்துடன் ஒரு நிர்வாகசபையும் காணப்படும் பொதுவாக இதன் பதவிக் காலம் ஒரு வருடமாகும்.

தொழிற் சங்கம் வருடந்தோறும் அறிக்கையை வெளியிடும். இது அதன் வருடாந்த அறிக்கை எனப்படும். இவ்வருடாந்த அறிக்கையில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

(i) கடந்த வருடம் தொழிற்சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகள்.

(ii) தொழிற் சங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்.

(iii) கணக்காய்வு செய்யப்பட்ட வருமானச் செலவுக் கணக்கு.

(iv) ஐந்தொகை.

ஒரு தொழிற்சங்கம் தொழிலாளருக்கு ஆற்றும் சேவைகளாவன,

(1) தொழில் வழங்குனருடன் பேரம் பேசித் தொழிலாளருக்கு நியாயமான சம்பளம் பெற்றுக் கொடுத்தல்.

(2) தொழிலாளர் நலன்கள் பாதிப்படையும் வேளையில் அதற்கு எதிராகக் குரல் கொடுத்தல்.

(3) தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை முகாமைக்கு எடுத்துக் கூறல்.

(4) தொழிலாளர்களுக்கு சமூகநல வசதிகள், கல்வி, ஆராய்ச்சி போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(5) கூலிகள் சபைகளில் பிரதிநிதித்துவம் வகித்தல்.

பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் சட்டமுறையான தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதில் பின்வரும் சலுகைகளை அனுபவிக்கலாம்.

(1) வேறு தொழிற்சங்கமொன்றின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

(2) தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொண்டு இருக்கையில் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாது தடுத்தல்

(3) தீர்வுகளிற்கான விசாரணைகளின் போது தொழிற்சங்கப் பிரதிநிதிகளைப் பங்கு பற்ற அனுமதித்தல்.

(4) தண்டப்பணம் செலுத்த தேவைப்படுமிடத்து தொழிற்சங்க சொத்துக்களைப் பயன்படுத்த முடிதல்.

தொழிற் சங்கம் ஒன்றின் மூலம் தொழில் தருநர்களும் சில நன்மைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

(1) தொழிற் சங்கத்தின் மூலம் தொழில் உறவுகளைச் சிறப் பாகப் பேணமுடிகின்றது.

(2) தொழிலாளர் தொடர்பான பிரச்சினைகளை இலகுவாக பேசித் தீர்க்க முடிகின்றது.

(3) தொழிற் சங்கங்கள் மூலம் கூட்டுப் பேரம் பேசி முடிவுக ளைப் பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் தொழிலாளர் களுடன் தனித் தனி பேச்சுவார்த்தை செய்ய வேண்டியது தவிர்க்கப்படுகின்றது.

(4) தொழிலாளர் தொழில் தருநர்களுக்கு இடையில் ஒரு முறை சார்ந்த தொடர்பினை ஏற்படுத்தல்.

தொழிற் சங்க கூட்டவை அல்லது சம்மேளனம் (Federation of Trade Union)

ஒரு வகையான தொழிலுக்குரிய பல்வேறு தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கும் அமைப்பே தொழிற் சம்மேளனம் எனப்படும். தொடர்புள்ள தொழிற் சங்கத்தின் குறைபாடுகளையும், பிரச்சினை களையும் மிகச் சிறந்த முறையில் வேண்டிய இடத்துக்கு எடுத்துக் கூற இக் கூட்டவையால் முடியும். இலங்கையில் அரசியல் கட்சிகள் சார்புடைய பல்வேறுவகையான தொழில்களைச் சார்ந்த தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்துதொழிற் சங்க சம்மேளம் உருவாக்கப்பட் டுள்ளது.

உதாரணம்:- ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்த தேசிய ஊழி யர் சங்க சம்மேளனம். தொழிற்சங்கம் ஒன்றிற்கும் தொழிற் சம்மே ளனம் ஒன்றிற்கும் இடையேயுள்ள பிரதான வேறுபாடுகளாவன.

(1) தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய அமைப்பு தொழிற்சங்கம் ஆகும். பல தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கும் அமைப்பு தொழிற் சம்மேளனம். தொழிற் சங்கத்தில் தொழிலாளர் அங்கத்தவராகக் காணப்படுவர் தொழிற் சம்மேளனத்தில் தொழிற்சங்கங்கள் அங்கத்தவ ராகக் காணப்படும்.

(2) தொழிற் சங்கத்தினைவிட தொழிற் சம்மேளனம் பெரிய அமைப்பாகும்.

(3) தொழிற் சங்கங்களை விட தொழிற் சம்மேளனம் பலம் வாய்ந்த அமைப்பாகும்.

தொழிற் பிணக்கு (Industrial Dispute)

தொழில் பெறுனர்களுக்கும் வழங்குனர்களுக்கும் இடையே தொழில் நடைமுறைகள் தொடர்பாக ஏற்படும் முரண்பாடுகள் அல்லது பாதகமான உறவுகள் தொழில் பிணக்குகள் எனப்படும். பின் வரும் காரணங்களால் தொழிற் பிணக்குகள் ஏற்படலாம்.

(1) நியாயமற்ற சம்பளமுறைமை,
(2) தொழிலாளர்கள் கடுமையாக நடத்தப்படல்
(3) தொழிலாளர் பெற்றுவந்த சில சலுகைகளை நீக்குதல்:
(4) தொழிலாளர்களைப் பாதிக்கும் சட்டங்களை இயற்றுதல்

கைத்தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதில் தொழில் திணைக்களம் பின்வரும் வழிகளில் உதவுகின்றது:

(1) தொழில் ஆணையாளர் பிணக்குடன் நேரடியாக தொடர்புடையோருடன் கலந்துரையாடித் தீர்த்தல்.
(2) தொழில் ஆணையாளர் உத்தரவுப்படி இணக்கம், நடுத் தீர்ப்பு முறைகளை ஏற்படுத்தி தீர்த்தல்.
(3) தொழில் மன்றத்திற்கு தீர்க்கப்படாத பிரச்சினைகளை மாற்றல்
(4) உயர் நீதி மன்றத்திற்கு தீர்க்கப்படாத பிணக்குகளை தொழிலமைச்சர் கட்டளைப்படி மாற்றல்.
(5) தீர்வு ஏற்படுமிடத்து கூட்டு உடன்படிக்கையை செய்து பின்பற்றச் செய்தல்;

கூட்டுப் பேரம் பேசல் (Collective Bargaining)

சம்பளம் வேலை நிபந்தனைகள் தொடர்பாக எழும் கருத்து வேறுபாடுகளை நீக்கும் முகமாக தொழில் வழங்குனருக்கும், தொழிற் சங்க பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெறும் தொடர்ச்சியான பேச்சு வார்த்தையினைக் கூட்டுப் பேரம் பேசல் என அழைப்பர். இதன் மூலம் பெறப்படும் இணக்கமானது எழுத்தில் எழுதப்பட்டு இருபகுதியினராலும் ஏற்றுக் கொள்ளப்படும். இதனை கூட்டு உடன் படிக்கை அல்லது கூட்டு இணக்கம் (Collective Agreement) என அழைப்பர். கூட்டு உடன்படிக்கை தொழில் ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசாங்க வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து சட்டரீதியான அந்தஸ்தினைப் பெற்றுக் கொள்கின்றது. கூட்டுப் பேரம் பேசல் மூலம் பின்வரும் நன்மைகள் ஏற்படுகின்றன.

(1) தொழில் தகராறுக்கு சுமூகமான தீர்வினைக் காணமுடிகின்றது.

(2) தனித் தனி தொழிலாளருடன் பேச்சுவார்த்தை செய்ய வேண்டிய தேவை தவிர்க்கப்படுகின்றது;

(3) கூட்டுப் பேரம்பேசல் மூலம் பெறப்படும் முடிவுக்கு சகல தொழிலாளரும் கட்டுப்படுவார்கள்.

(4) நிறுவனத்தில் அமைதியினை ஏற்படுத்த முடியும்.

இணக்கம் (Conciliation)

தொழில் பிணக்கு ஒன்றைத் தீர்க்கும் பொருட்டு தொழில் ஆணையாளரால் மூன்றாம் நபர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவர்மூலம் பிணக்கிற்குத் தீர்வு காணப்படுதலை இணக்கம் எனலாம். மூன்றாம் நபரானவர் இருபகுதியினரிடையே காணப்படும் கருத்து வேறுபாடு களைக் குறைத்து ஒரு நியாயமான உடன்பாட்டுக்கு இரு பகுதியின ரும் வர முயற்சி செய்வர். இத்தகைய இணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் உத்தியோகத்தரை இணக்க அதிகாரி என அழைப்பர். இவர் ஒரு போதும் ஒரு குறிப்பிட்ட தீர்வை ஏற்றுக் கொள்ளும்படி கட்சியினரை நிர்ப்பந்திக்க முடியாது.

நடுவர் தீர்ப்பு (Arbitration)

கூட்டுப் பேரம்பேசல் முறையூடாகவும், இணக்க மூலமும் தொழிற் பிணக்குத் தீர்வு காணமுடியாத போது நடுவர் தீர்ப்பு முறை பயன் படுத்தப்படும். நடுவர் தீர்ப்பு என்பது தொழிற் பிணக்கிற்குத் தீர்வு காணும்படி மூன்றாம் நபர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவரால் வழங் கப்படும் தீர்ப்பினைக் குறிக்கும். இவ் நடுவரானது கட்டாயத்தின் பேரில் நியமிக்கப்படுவதனைக் கட்டாய நடுவர் தீர்ப்பு எனவும், விருப்பத்தின் பெயரில் நியமிக்கப்படுவதனை விருப்பத்தின் பெயரி லான நடுவர் தீர்ப்பு எனவும் அழைப்பர். பின்வரும் அம்சங்களில் இணக்கமானது, நடுவர் தீர்ப்பினின்றும் வேறுபட்டதாகும்.

(1) நடுவர் தீர்ப்பு இரு பகுதியினரையும் கட்டுப்படுத்தும்

(2) நடுவர் தொழில் தருனர், தொழிலாளிகள் ஆகியோரது சாட்சிகளைக் கருத்தில் கொண்டு தீர்ப்பினை வழங்குவர்.

மறியல் செய்தல் (Picketing)

தொழில் பிணக்கு ஏற்படும் வேளையில் ஒரு சிலரோ அல்லது தொகுதியினரோ நிறுவனத்தின் முன் அமைதியான முறையில் சுலோக அட்டைகளைத் தாங்கி ஊழியர்களைத் தொழிலுக்குப்போக வேண்டாம் எனவும், வாடிக்கையாளர்களைக் கொடுக்கல் வாங்கல் செய்ய வேண்டாம் எனவும் வழிமறிக்கும் முறையினை மறியல் போராட்டம் என்பர்.

கூலி நிர்ணயசபைக் கட்டளைச் சட்டம்
(Wages Board Ordinance)

1947-ம் ஆண்டு 23-ம் இலக்க சம்பள நிர்ணயசபைக் கட்டளைச் சட்டமும், 1966-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இச்சட்டத்திற்கான திருத்தமும் தற்போது அமுல் படுத்தப்படுகின்றது. இச் சபையின் முக்கிய கடமைகளாவன,

(1) கைத்தொழிலில் ஈடுபட்டவர்களின் இழிவுச் சம்பளத்தை நிர்ணயித்தல்.

(2) காலத்திற்கு காலம் இவற்றை மீளாய்வு செய்தல்.

(3) காலத்திற்குக் காலம் வெவ்வேறு வகையான தொழிலில் ஈடுபட்டவர்களின் இழிவுச் சம்பளத்தை நிர்ணயிக்கும் பொருட்டு சம்பள நிர்ணயசபைகள் தொழில் அமைச்சில் நியமனம் செய்தல்.

கூலி நிர்ணயசபை தொழிற்சங்கங்களைப் பிரதிநிதிப் படுத்தும் அங்கத்தவர், தொழில் தருனர் நிறுவனங்களை பிரதிநிதிப்படுத்தும் அதேயளவு அங்கத்தவர், அமைச்சரால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஆகியோர் கொண்டு உருவாக்கப்படுகின்றது.

கடைகள் காரியாலயச் சட்டம் (Shop and Office Act)

1954-ம் ஆண்டில் 6-ம் இலக்கச் சட்டத்தின் கீழ் பின்வரும் அம்சங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன.

(1) வேலை மணித்தியாலங்களை நிர்ணயித்தல்

(2) ஊழியர்களுக்கு வழங்கவேண்டிய ஓய்வு

(3) ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய வருடாந்த, வாராந்த விடுமுறைகள் பற்றி எடுத்துக் கூறல்.

(4) ஊழியருக்கு உணவு அருந்தலுக்கு ஒதுக்க வேண்டியநேரம்.

(5) ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய வசதிகள் இதன் மூலம் ஊழியர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

(6) பெண் தொழிலாளருக்குப் பிள்ளைப்பெறுகாலநல வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

கடைகள் காரியாலயச் சட்டத்திற்கு அமைய பின்வரும் வகுதிகளைச் சேர்ந்தோர் வேலையில் அமர்த்தப்படுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது;

(1) 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள்;

(2) நிறுவனங்களில் இரவு நேரங்களில் பெண்கள் வேலைக்கு அமர்த்தல் தடைவிதிக்கப்பட்டுள்ளன.

தொழில் முறைமன்று அல்லது தொழில் நியாயசபை)
(Labour Tribunal)

தொழிற் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு தொழில் திணைக்களத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்டரீதியான அமைப்பு இதுவாகும். தொழில் நியாயசபைக்கான உறுப்பினர்கள் தொழில் ஆணையாளரால் தெரிவு செய்யப்படுவர். வேலையை விட்டு நீக்கப் படும் ஊழியர் வேலை நீக்கம் செய்யப்பட்டு 6 மாதத்திற்குள் இந் நியாய சபைக்கு முறையிடலாம். இந் நியாயசபை முதலாளிக்கு இடையிலான கருத்து வேறுபாடுகளை ஆராய்ந்து தீர்ப்பை வழங்கும். தீர்ப்பை மேன்முறையீடு செய்யலாம்.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம்.
(ILO – International Labour Organisation)

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஓர் இணைந்த ஸ்தாபனமான இவ் அமைப்பு 1919–ஏப்ரல் 11–ம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. இவ் நிறுவனம் பின்வரும் நோக்கங்களுக்காகத் தொழிற்படுகிறது.

(1) தொழிலாளர் நிலைமையையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தல்.

(2) தொழிலாளரது பொருளாதார சமூக தரங்களை உறுதிப் படுத்தல்.

(3) சமூக நிலைமைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் உலக சமாதானத்தைப் பாதுகாத்தல்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
(Foreign Employment Bureau)

இப் பணியகம் 1985–ம் ஆண்டு மே மாதம் உருவாக்கப்பட்டது. தொழில் அமைச்சின் கீழ் தனிப்பட்ட ஓர் கூட்டுத் தாபனமாக இது இயங்குகிறது. வெளி நாடுகளில் வேலை வாய்ப்புக்கு ஆட்களைத் திரட்டும்போது மேற்கொள்ளப்படும் மோசடிகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு இப்பணியகம் உருவாக்கப்பட்டுள்ளது, இப்பணியகத்தின் பிரதான தொழிற்பாடுகளாவன,

(1) தனியார் தொழில் முகவர் நிலையங்களுக்கு அனுமதி வழங் கல் அவற்றைப் பதிவு செய்தல்.

(2) மோசடி காணப்படும் தனியார் தொழில் முகவர் நிலை யங்களைத் தடை செய்தல்.

(3) அங்கீகரிக்கப்பட்ட சகல தொழில் முகவர் நிலையங்களும் வெளிநாடுகளில் வேலைக்கு ஆட்களைத் திரட்டி அனுப்பும் போது அதற்கான அங்கீகாரம் வழங்குதல்,

(4) வெளிநாடுகளில் வேலைபுரிபவர்களுக்கு எனக் காப்புறுதித் திட்டம் ஒன்றைத் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆதரவுடன் அறிமுகப்படுத்தியுள்ளது.

(5) வெளிநாடுகளில் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

தேசிய தொழிற் பயிற்சி சபை
(NAB - National Apprentice ship Board)

பல்வேறு கைத்தொழில் அமைப்புக்களில் தொழில் பயிலுனர்களை ஒரு திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு வகையான தொழில்களில் பயிற்சிகள் அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு நியதிச் சபையே தேசியதொழிற் பயிற்சிச் சபையாகும். பாடசாலையைவிட்டு வெளியேறிய மாணவர்களைத் தெரிவு செய்து பொருத்தமான பயிற்சியை அளிக்கிறது. இதன் மூலம் செய்முறை தொடர்பான பயிற்சியைப் பெறவும், நாட்டில் அப்பயிற்சி பெற்ற தொழிலாளர்களை உருவாக்கவும் உதவுகின்றது. தேசிய தொழிற் பயிற்சி சபை பயிற்சி அளிப்பதன் மூலம் நாட்டில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் காணப்படுவதோடு நிறுவனங்கள் நேரடியாக பயிற்சி பெற்ற தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தக்கூடியதாக உள்ளது.

ஊழியர் சேமலாப நிதி (E P. F)

தனியார் அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாபநிதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஊழியர் சேமலாபநிதி சட்டத்தின்படி தனியார் அரச கூட்டுத்தாபன ஊழியர்களின் சம்பள அடிப்படையில் ஆகக் குறைந்தது 12%தை தொழில் வழங்குனரும், 8%தை தொழில் பெறுநரும் ஊழியர் சேமலாபநிதிக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும். இத் தொகை திரட்சியாக வட்டியுடன், ஊழியர்களுக்கு வழங்கப்படும். பின்வரும் சந்தர்ப்பங்களில் ஊழியர் சேமலாபநிதித்தொகையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(1) 55 வயதில் வேலையை விட்டு இளைப்பாறும்போது

(2) பெண் தொழிலாளராயின் 50 வயதில் இளைப்பாறும் போது.

(3) வேலையைச் செய்வதற்கு முழு அளவில் அல்லது பகுதியளவில் இயலாது போனால் சேம லாபநிதி தொகையைப் பெறலாம்.

(4) தொழிலாளி இறப்பின், பின் உரித்தாளருக்கு வழங்கப்படும்

(5) பெண் ஊழியரைப் பொறுத்து திருமணத்திற்குப் பின்பு வேலையை விட்டு விலகும்போது.

(6) இலங்கையை விட்டு நிரந்தரமாக வெளிநாடு செல்லும் போது.

(7) அரசாங்க சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் பெறக் கூடியதுமான பதவி ஒன்றை பெற்றுக்கொள்ளும் போது.

மேற்குறிப்பிட்ட நிலைமைகளில் சேமலாபநிதி விடுவிக்கப்படும். இத் தொகையை பெற்றுக் கொள்ளும் பொருட்டு, தொழில் திணைக் களத்தில் பெற்றுக் கொண்ட விண்ணப்பப் படிவத்தில் தொழில் ஆணையாளருக்கு விண்ணப்பிக்க வேணும்;

ஊழியர் சேமலாபநிதிச் சட்டம் நிறைவேற்றப் பட்டதைத் தொடர்ந்து ஊழியர் சேமலாப நிதித் திணைக்களம் 1958 ஒக்டோபரில் உருவாக்கப்பட்டது. இத் திணைக்களம் தொழில் திணைக்களத்துடன் மிக நெருங்கிய முறையில் தொழிலாற்றுகிறது. தொழில் திணைக்களத்திடம் ஊழியர் சேமலாபநிதி நிர்வாகம், சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்தும் பொறுப்பும் ஒப்படைக்கப் பட்டுள்ளது. மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதித் திணைக்களம் பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்.

(1) இணக்குகளைப் பேணல்

(2) உதவு தொகை பெறல்

(3) மீளச் செலுத்துதல்

இவ் நிதியத்திலுள்ள பணத்தை முதலீடு செய்யும் பொறுப்பு நாணயச் சபையைச் சார்ந்தது.

ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF Employees Trust Fund)

ஊழியர் நம்பிக்கை நிதியம் 1980-ம் ஆண்டு ஊழியர் நம்பிக்கை நிதிய 46-ம இலக்க 1980-ம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் 1981 முதல் பகுதியில் உருவாக்கப் பட்டது. இத் திட்டத்தின் பிரகாரம் தனியார் துறை, கூட்டுத்தாபனம் என்பனவற்றினைச் சேர்ந்த ஊழியரின் சம்பளத்தின் 3% தை தொழில் தருநர் இவ் நிதியத்திற்குச் செலுத்தல் வேண்டும். தொழிலாளி இவ் நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டியதில்லை. இவ் நிதியத்திலுள்ள தொகை முதலீட்டுத் திட்டங்களில் ஈடுபடுத்தப்படும். தொழிலாளி இளைப்பாறும்போது தொகையானது திரட்சியாக வழங்கப்படும். ஊழியர் நம்பிக்கை நிதியம் தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் சட்டப்படியான குழு.

ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பினை தொழில் தருநர் செலுத்துகின்றனர். ஆனால் அதன் பலாபலன் ஊழியர்கள் அனுபவிக்கின்றனர். எனவே இது சேவை நோக்குடைய திட்டமாகும். அத்துடன் ஊழியர் நம்பிக்கை நிதியத்திலுள்ள தொகை

முதலீட்டு திட்டங்களில் ஈடுபடுத்தப்படும். இதனால் சேமிப்பு, பொரு
ளாதார அபிவிருத்தி என்பன ஏற்படுகின்றது.

அங்கத்தவர்களின் நிதியங்களைப் பாதுகாக்க ஊழியர் நம்பிக்கை
நிதியம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

(1) இவ் நிதியத்தில் இருந்து நிலைவைகள் கழிக்க அனுமதிக்கப்
படுவதில்லை.

(2) இதற்கு குறிப்பிட்ட தொழிலாளியின் எழுத்து மூலமான
அனுமதி கிடைத்தால் மட்டுமே நிலுவைகளை கழிக்கலாம்

(3) தொழிலாளிகளினால் மேற்கொள்ளப்படும் மோசடிகளுக்கு
எதிராக அத்தொகையை கழிக்க முடியாது.

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் இலவச ஆயுட் காப்புறுதி
(Employees Trust Fund Free Life Assurance Scheme)

ஊழியர் நம்பிக்கை நிதியம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்
தாபனத்துடன் இணைந்து 1980 மார்ச் முதலாம் திகதி தொடக்கம்
ஆயுட் காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது; ஊழியர்க
ளின் சமூக பொருளாதார நன்மைகளைக் கருத்திற் கொண்டு இத்
திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதனுடைய விபரங்கள் வரு
மாறு.

(i) ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்துவம் வகிக்கும்
70 வயதுக்கு மேற்படாத சகல அங்கத்தவர்களும் சேர்த்
துக் கொள்ளப்படுவர்.

(ii) மரணமடையும்போது அங்கத்தவர் சேவையில் இருப்பதுடன்
70 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

(iii) அங்கத்தவர் மரணமடையும்போது தொழில் தருனர் 3%
பணத்தை அங்கத்தவரின் சார்பில் தொடர்ச்சியாக குறைந்
தது 6 மாதங்களுக்காவது செலுத்தியிருத்தல் வேண்டும்.
மரணம் தற்கொலையாக இருப்பின் இவ் 3% பணம்
தொடர்ச்சியாக 12 மாதங்களுக்காவது செலுத்தப்பட்டி
ருத்தல் வேண்டும்.

(iv) காப்புறுதி செய்யப்பட்டவர் மரணமடைந்து 2 வருடங்க
ளுக்குள் அவரில் தங்கியிருப்போர் காப்புறுதிப் பணத்தைக்
கோரல் வேண்டும்;

(v) வழங்கப்படும் காப்புறுதித் தொகை சம்பளத்தில் 10 மடங்கு
அல்லது 50,000/- ரூபா. இதில் எது குறைவோ அத்
தொகையைக் கொண்டிருக்கும்.

இலவச ஆயுட் காப்புறுதி தவிர இலவச விபத்து இழப்பீடு, இலவச
இருதய சத்திர சிகிச்சை என்பனவற்றினை வழங்குகின்றது.

ஊழியர் பணிக்கொடை (Gratuity)

தனியார் நிறுவனம் அல்லது கூட்டுத்தாபனங்களில் ஐந்துவருடங்களிற்கு மேலாக வேலைசெய்து, வேலையை விட்டு விலகும் ஊழியருக்கு சேவைக் காலத்தினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் ஒரு திரட்சியான தொகை ஊழியர் பணிக்கொடை எனப்படும்.

ஊழியர் கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் அரை மடங்கினை சேவைக் காலத்தின் மடங்குகளால் பெருக்கி ஊழியர் பணிக்கொடை வழங்கப்படும்.

ஊழியர் பணிக்கொடை = கடைசியாகப் பெற்ற சம்பளத்தின்
($\frac{1}{2}$ மடங்கு × சேவைக்காலம்.)

ஊழியர் பணிக்கொடையினைக் கணிப்பீடும் போது கடைசியாகப் பெற்ற சம்பளம் கருத்தில் கொள்ளப்படுகின்றது. அத்துடன் ஊழியர் பணிக்கொடையைப் பெறுவதற்கு குறிப்பிட்ட காலம் சேவையாற்றி இருத்தல் வேண்டும்.

கடன் அட்டை (Credit Card)

வங்கி தனது வாடிக்கையாளருக்கும், வாடிக்கையாளர் அல்லாதோரிற்கும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் கடனுக்கு பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கும் ஒரு உத்தரவாத அட்டை கடன் அட்டையாகும்; இவ் அட்டையை வர்த்தக வங்கியும், வங்கியல்லாத நிறுவனமும் வழங்குகின்றது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, சம்பத் வங்கி, தபினான்ஸ் கம்பனி லிமிட்டெட் ஆகிய நிறுவனங்கள் வழங்குகின்றன; இவ் அட்டையுடன் மூன்று வகுதியினர் தொடர்புடையவர்கள்.

(1) இவ் அட்டையை வழங்கும் வங்கி
(2) இவ் அட்டையைப் பெறுபவர்.
(3) இவ் அட்டைக்கு பொருட்கள் சேவைகளை வழங்கும் நிறுவனம்.

இவ் அட்டையைப் பெற்றுக் கொள்பவர் கடனுக்குப் பொருட்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதுடன், பணத்தினை எடுத்துச் செல்வதிலுள்ள பாதுகாப்பின்மையையும் தவிர்த்துக் கொள்ள முடிகின்றது. அத்துடன் பணம் இல்லாத போதும் கொள்வனவினை மேற்கொள்ள முடிகின்றது. மறு புறத்தில் இது நுகர்வுச் செலவினை அதிகரிக்கின்றது.

கடன் அட்டைக்கு பொருட்கள் சேவைகளை வழங்கும் நிறுவனம் தனது விற்பனையை அதிகரிக்க முடிகின்றது. அத்துடன் அறவிடமுடியாக்கடன் நட்டத்தினைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

6

உதாரணம்:- சீபாங்கடன் அட்டை, சம்பத் கடன் அட்டை, மக்கள் வங்கி கடன் அட்டை.

காசோலை உத்தரவாத அட்டை (Cheque Guarantee Card)

இவ் அட்டை வங்கியினால் தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு முக்கியமாக சொந்தக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளருக்கே வழங்கப்படுகின்றது. காசோலை உத்தரவாத அட்டையில் குறிப்பிட்ட தொகைக்கு காசோலையினை மாற்றும்போது அல்லது பொருட்கள் சேவைக்கான கொடுப்பனவினை காசோலைமூலம் செலுத்தும்போது அதற்கான உத்தரவாதத்தினை வழங்குகின்றது. இவ் அட்டையினைக் கொண்டுள்ள ஒருவர் தனது கொடுப்பனவினை மேற்கொள்ளும்போது காசோலையின் பின் புறத்தில் அட்டையின் இலக்கத்தினையும், கையொப்பத்தினையும் இட்டு உத்தரவாத அட்டையுடன் உரியவருக்கு செலுத்தலாம். காசோலையை பெறுபவர் காசோலையில் எழுதப்பட்ட அட்டையின் இலக்கம், பெயர், கையொப்பம் என்பனவற்றை காசோலை உத்தரவாத அட்டையுடன் சரிபார்த்துவிட்டு அட்டையைத் திருப்பி வழங்குவர். காசோலைக்கு வங்கி உத்தரவாதத்தை வழங்குவதனால் அதனை ஏற்பவர் எவ்வித தயக்கமுமின்றி அதனை ஏற்கலாம் இது ஏற்பவருக்கு வசதியானது.

டெலர் அட்டை (Teller Card)

இவ் அட்டை முதன் முதலில் 1986-ம் ஆண்டு கொங் கொங் அன் சங்காய் வங்கிக் கூட்டுத்தாபன லிமிட்டெட் அறிமுகப்படுத்தியது. வங்கியின் வாடிக்கையாளர் இவ் அட்டையைப் பயன்படுத்தி வங்கியில் காணப்படும் தன்னியக்கப் பொறிமூலம் எந்நேரமும் பணத்தை மீளப் பெறவும், வைப்பில் இடவும் வசதி அளிக்கப்படுகின்றது. அத்துடன் கணக்கிலுள்ள மீதியையும் அறியலாம். இத்தகைய வசதியினால் வங்கி மூடப்பட்ட போதும், வாடிக்கையாளர் பணத்தை மீளப்பெற வைப்பிலிட வசதி அளிக்கின்றது. அதாவது 24 மணி நேரமும் வங்கிச் சேவையைப் பெறலாம். தற்போது பல வணிக வங்கிகள் வாடிக்கையாளருக்கு இச் சேவையை வழங்குகின்றது. இவ் அட்டைகள் வெவ்வேறு பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது

சம்பத் வங்கி — SET காட்
கொங் கொங் அன் சங்காய் வங்கி — ETC காட்
சார்ட்டட் வங்கி — MONEY LINK காட்
வர்த்தக வங்கி — CAT காட்

இலங்கை வங்கி — AJM காட்
ஹட்டன் நஷனல் வங்கி — CASHLINE காட்
மக்கள் வங்கி — PET காட்

வணிக வங்கிகளினால் வழங்கப்படும் சில அட்டைகளை இலங்கைக்கு வெளியேயும் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்குப் பயன் படுத்தப்படும். இது ''சர்வதேச கடன் அட்டை'' என அழைக்கப்படும். சர்வதேச கடன் அட்டையை வைத்திருப்பவர்களுக்கு நாணயமாற்றுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் ஒரு குறிப்பிட்ட தொகைவரையிலான அந்நிய செலாவணியை, அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதியின்றி அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கான சலுகை வழங்கப்படுகின்றது.

தன்னியக்க கொடுக்கல் வாங்கல் இயந்திரம்

(Automated Teller Machine)

வங்கியின் அலுவலக நேரத்தில் மட்டுமன்றி, எல்லாநேரங்களிலும் வரையறுக்கப்பட்ட சில வங்கிச் சேவைகளை வழங்கும் பொறிகள் தன்னியக்க கொடுக்கல் வாங்கல் இயந்திரம் எனப்படும் தன்னியக்கமாக இயங்கும் இவ் இயந்திரம் மூலம் வரையறுக்கப்பட்ட சில வங்கிச் சேவையினை 24 மணி நேரமும் வாடிக்கையாளர் பெற்றுக் கொள்ள முடியும். வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் அட்டைகள் மூலம் இவ் சேவைகளைப் பெறலாம். பின்வரும் சேவைகள் தன்னியக்க கொடுக்கல் வாங்கல் இயந்திரம் மூலம் வழங்கப்படும்.

(1) கணக்கிலுள்ள மீதியினை அறியலாம்.

(2) பணத்தினை மீளப் பெறலாம்.

(3) கணக்குகளிற்கு இடையே பணத்தினை மாற்றலாம்.

வரையறுக்கப்பட்ட கொங் கொங் அன் சங்காய் வங்கி அவர்களது வாடிக்கையாளர்களினால் சர்வதேச தன்னியக்க ரெலர் பொறி அட்டை வலையமைப்பு மூலம் இலங்கையிலுள்ள கொங் கொங் வங்கியில் தமது கணக்கினை பேணும் பொருட்டு புதிய சர்வதேச தன்னியக்க டெலர் பொறி அட்டை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது தற்போது ஹட்டன் நஷனல் வங்கியும், மக்கள் வங்கியும் இணைந்து தன்னியக்க டெலர் இயந்திரத்தினைப் பயன் படுத்தும் நோக்கில் இரு வங்கிகளுக்கும் இடையிலான பொதுவான வலைப்பின்னல் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஹட்டன் நஷனல் வங்கியினால் வழங்கப்பட்ட டெலர் அட்டையையும், மக்கள் வங்கியினால் வழங்கப்பட்ட டெலர் அட்டையையும் வைத்திருப்போர் எந்நேரமும்

ஹற்டன் நஷனல் வங்கியினாலும், மக்கள் வங்கியினாலும் நிர்வகிக்கப்படும் தன்னியக்க டெலர் இயந்திரமூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியும்.

அந்நிய செலாவணி வங்கி அலகு (FCBU - Foreign Currency Banking Unit)

அந்நிய செலாவணியில் வைப்புகளை ஏற்கவும், கடன்களை வழங்கவும என வணிக வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட புதிய வங்கிப் பிரிவே அந்நிய செலாவணி வங்கி அலகு எனப்படும். இப பிரிவூடாக 10 அந்நிய நாணயங்களில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளலாம். இப்பிரிவூடாக இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கிகாரம் பெற்ற முதலீட்டாளர்களும், மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வதிவோரும், வெளிநாட்டவர்களும் கொடுக்கல், வாங்கல்களை மேற்கொள்ளலாம்.

கரைகடந்த வங்கிச்சேவை (Off shore Banking)

கரைகடந்த வங்கி எனப்படுவது சுதந்திரமான முறையில் நாட்டுக்கு வெளியே காணப்படும் வாடிக்கையாளருடனும் நாட்டுக்குள் காணப்படும் தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளருடனும் அவ் நாட்டு நாணய அலகு அல்லாத வேறுநாட்டு நாணய அலகில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வங்கிச் சேவையாகும். கரை கடந்த வங்கிச் சேவையின் பிரதான நோக்கங்களாவன,

(1) வெளிநாட்டுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் நிதி வசதிகளை வழங்கல்.

(2) சுதந்திர வர்த்தக வலயத்தில் காணப்படும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் நிதிவசதி அளித்தல்.

(3) சர்வதேச வங்கிகள் உருவாகுவதற்கு வசதி அளித்தலும் அதன் மூலம் சர்வதேச நிதி நிலையம் உருவாகுவதற்கு உதவுதலும்,

(4) வதியாதோரின் அந்நிய நாணயக் கணக்கிலுள்ள தொகையினைப் பயன்படுத்தி கடன் வசதிகளை வழங்கல்.

அரச ஈட்டு முதலீட்டு வங்கி (State Morigage Investment Bank)

1979-ல் அரசஈட்டு வங்கி, கமத்தொழில் கைத்தொழில் கடன் கூட்டுத்தாபனமும் ஒன்றிணைந்து இது உருவாக்கப்பட்டது. இவ் வங்கி பின்வரும் நோக்கங்களுக்கு கடன் வழங்கும்.

(1) வீடுகளைக் கட்ட

(2) வீடுகளைப் புனரமைக்கவும் விஸ்தரிக்கவும்.

(3) வீடுகட்ட காணிகளைக் கொள்வனவு செய்ய.

(4) விவசாய நோக்கத்திற்கு.

இவ் வங்கி 1-7-1990-ல் புதிய சேமிப்புச் சான்றிதழ் ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. இது விசேட சேமிப்பு சான்றிதழ் எனப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. இச் சான்றிதழானது முறையே 500/-, 1000/-, 5000/-, 10,000/- பெறுமதியான 5 வருட முதிர்வு காலத்தையும், வருடாந்தம் 10% வட்டியையும் கொண்டது. அவசரதேவையின்போது காசாக மாற்றலாம், அத்துடன் பின் உரித்தாளரையும் நியமிக்கலாம். இச் சான்றிதழ்திட்டமானது சில விசேட அம்சங்களைக் கொண்டது. அவையாவன:-

(1) முதிர்வின்போது வைப்புத் தொகை இரண்டு மடங்காகும்.

(2) சான்றிதழைக் கொள்வனவு செய்தவர் வைப்புத் தொகையின் பத்து மடங்கிற்கு கடன் பெறலாம்.

பணச்சந்தை (Money Market)

குறுங்கால கடன்களை வளங்குகின்ற நிறுவனங்களையும், கடன்களுக்கான ஆவணங்களைக் கையாளும் சந்தையினை பணச் சந்தை எனலாம். குறுங்காலம் என்னும் போது ஒரு வருடத்திற்கு உட்பட்ட காலத்தினைக் குறிக்கின்றது. மத்திய வங்கியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட குறுங்கால கடன்களை வழங்கும் அமைப்புக்களைக் கொண்டது ஒழுங்குபடுத்தப்பட்ட பணச்சந்தையாகும்;

உதாரணம்: வணிக வங்கி மத்திய வங்கியின் கட்டுப்பாட்டுக்கு உட்படாமல் குறுங்கால கடன்களை வழங்கும் நிறுவனங்களை கொண்டது ஒழுங்குபடுத்தப்படாத பணச் சந்தை எனப்படும்;

உதாரணம்: வட்டிக்கு கடன் கொடுப்போர்,

குறுங்காலக் கடன் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் ஆவணங்கள் பணச்சந்தை கருவிகளாகும். அவையாவன,

(1) திறைசேரி உண்டியல்கள்

(2) வியாபார உண்டியல்கள்

(3) வைப்புச் சான்றிதழ்கள்

(4) வரிஒதுக்குச் சான்றிதழ்

துணிகரத் தொழில் முயற்சி மூலதனக் கம்பனிகள்

1993 வரை நாட்டில் ஆறு துணிகரத் தொழிற்பயிற்சி கம்பனிகள் காணப்படுகின்றன. அவையாவன,

(1) வரையறுக்கப்பட்ட கப்பிட்டல் டிவலொப்மென்ட் அன்ட் இன் வெஸ்ட்மன்ட் கம்பனி.
(2) வரையறுக்கப்பட்ட ஈகுவிடி இன் வெஸ்ட் மன்ட் கம்பனி
(3) வரையறுக்கப்பட்ட லங்கா வென்சர் இன் வெஸ்ட் மன்ட் (தனியார்) கம்பனி.
(4) வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி வென்சர் இன்வெஸ்ட் மன்ட்
(5) வரையறுக்கப்பட்ட பீப்பில்ஸ் வென்சர் இன் வெஸ்ட் மன்ட் (தனியார்) கம்பனி.
(6) வரையறுக்கப்பட்ட த சென்ரல் பினான்ஸ் வென்சர் பண்ட் கம்பனி

மேற்குறிப்பிட்ட கம்பனிகள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் துறைகளில் பட்டியலிடப்படாத சிறிய நடுத்தர கம்பனிகளுக்கு ஒப்பரவு அல்லது ஒப்பரவு வகைநிதியினை வழங்குகின்றது

புதிய கைத்தொழில் கொள்கை (New Industrial Policy)

பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதனையும், கொழும்பு மாவட்டத்தில் தேவைக்கு அதிகமாக கைத்தொழில்கள் குவிதலினால் ஏற்படும் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதனையும் நோக்கமாகக் கொண்டு 1990 க்குப் பின்னர் புதிய கைத்தொழில் கொள்கை பின்பற்றப்பட்டது. இவ் கைத்தொழில் கொள்கையானது கிராமியப் பிரதேசங்களில் கைத்தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டது. இதற்கமைய 21 மாவட்டங்களில் புதிய கைத்தொழில்கள் உருவாக்கப்பட்டது.

மேலும் 200 ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 134 தொழில் முயற்சிகள் வர்த்தகத் தொழிற்பாட்டில் ஈடுபட்டதுடன் 70,000 பேருக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதுடன் ஏற்றுமதியும் அதிகரித்தது பெருமளவு எண்ணிக்கையான பிடவை ஆலைகள் நாட்டின் கஸ்டமான பிரதேசங்களில் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரத்தினக்கல் வியாபார வங்கி

இரத்தினக்கல் வியாபார வங்கி ஒன்றை ஸ்தாபிப்பதற்கும், இரத்தினக்கற் கைத் தொழிலுக்கும், ஆபரணக் கைத்தொழிலுக்கும்,

கடன் வசதி கிடைப்பதை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காகவும், இத் தொழில்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காகவும் 1993-ம் ஆண்டு 51-ம் இலக்க இரத்தினக்கல் வியாபார வங்கிச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதற்கமைய இரத்தினக்கல் வியாபாரவங்கி ஆரம்பிக்கப்படவுள்ளது, இவ்வங்கியின் பிரதான செயற்பாடுகளாவன:

(i) இலங்கையில் இரத்தினக்கற் கைத்தொழிலுக்கும், ஆபரணச் கைத்தொழிலுக்கும் கடன் வசதி கிடைப்பதனை ஊக்குவித்தல்.

(ii) இக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்.

(iii) இரத்தினக்கல் கைத்தொழிலுக்கும் ஆபரண கைத்தொழிலுக்கும் கடன் கொடுக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் மீள் நிதியளிப்பு வசதிகளை ஏற்பாடு செய்தல்

(iv) இரத்தினக்கற் கைத்தொழிலிலும், ஆபரணக் கைத்தொழிலிலும் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு கடன் வசதிகளை ஏற்பாடு செய்தல்.

இடம் பெயர் வங்கித் தொழில் நிலையங்கள் (Mobile Banking Service)

வங்கி வசதி இல்லாத அல்லது குறைவான வங்கி வசதிகளைக் கொண்ட பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு வங்கி வசதிகளை வழங்கும் நோக்கில் இரண்டு அரச வணிக வங்கிகளும், சில வர்த்தக வங்கிகளும், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் சேவையை வழங்குகின்றன.

சர்வதேச மறுசீரமைப்பு அபிவிருத்தி வங்கி (IBRD)

1944-ம் ஆண்டு யூலை மாதத்தில் 28 நாடுகளின் பிரதிநிதிகளால் ஐக்கிய அமெரிக்காவில் பிறிற்றன்வூட் நகரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'பிரிட்டன்வூட்' ஒப்பந்தத்தின் கீழ் 1945-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ந் திகதி இது ஆரம்பிக்கப்பட்டது. தலைமை அலுவலகம் வாசிங்டன் நகரத்தில் அமைந்துள்ளது. உலகமகா யுத்தத்தினால் பொருளாதார அழிவுக்கு உட்பட்ட தேசநாடுகளைப் புனர்நிர்மாணம் செய்வதனை ஆரம்பமாகக் கொண்டுள்ள இவ் அமைப்பு பின்வரும் சேவைகளை அங்கத்துவ நாடுகளுக்கு வழங்குகின்றது.

(1) அங்கத்துவ நாடுகளின் உற்பத்தியை விருத்தி செய்தல்.

(2) அதற்குரிய மூலதனத்தை வழங்கல்.

(3) பிறநாட்டு முதலீடுகளை விரிவாக்கல் மூலம் பலன் அளிக்கக்கூடிய உற்பத்தி கடன் அளித்தல்.

(4) அங்கத்துவ நாடுகளின் உற்பத்தி மூலவளங்களின் அபிவிருத்திக்கு அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

இவ் வங்கி அவசியமான நிதியங்களை பின்வரும் மூலகங்களில் இருந்து பெறுகிறது.

(1) அங்கத்துவப் பணம்
(2) திரண்ட இலாபம்
(3) அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு பிணைகள் தொகுதிக் கடன்களை வழங்கி நிதி பெறல்.

சர்வதேச நாணய நிதியம் (IMF)

1944-இல் நிறைவேற்றப்பட்ட பிறிட்டன்வூட் ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இரண்டாவது நிறுவனம் இதுவாகும். இது 1945 டிசம்பர் 21-ம் திகதியில் இருந்து செயற்படத் தொடங்கியது.

சர்வதேச நாணயநிதியத்தின் குறிக்கோள்களாவன.

(1) அங்கத்துவ நாடுகளிடையே நிதிக்கூட்டுறவை மேம்படுத்தல்
(2) சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்தலும், அதில் சமப்பாட்டைப் பேணலும்
(3) வேறுபட்ட நாடுகளின் செலாவணி விகிதத்தை இயன்றளவுக்கு உறுதியாக வைத்திருத்தல்
(4) பல்பக்கக் கொடுப்பனவு முறையை உருவாக்கல்
(5) குறுங்கால வர்த்தக நிலுவைகளை, அங்கத்துவ நாடுகள் சரிசெய்து கொள்ளக் கடன் கொடுத்தல்

சர்வதேச நாணய நிதியம் கடன்களை அங்கீகரிப்பதில் அங்கத்துவ நாடுகளின் பின்வரும் தேவைகளுக்கு முக்கியம் வழங்குகின்றன.

(1) சென்மதி நிலுவை பாதக நிலையை நிவர்த்தி செய்தல்.
(2) சர்வதேச வியாபார அபிவிருத்தி
(3) சர்வதேச வியாபாரக் கடனைத் தீர்த்தல்

விசேட கொடுப்பனவு உரிமை (SDR)

சர்வதேச நாணய நிதியத்தினால் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கப்படும் நிபந்தனையற்ற சர்வதேசபண ஒதுக்குமுறையாகும். இதனை கடதாசித் தங்கம் எனவும் அழைப்பர். 1970இல் விசேட எடுப்பனவு உரிமை அறிமுகப்படுத்தப்பட்டது சர்வதேச நாணய நிதியத்தின் ஒரு பகுதியான இது பின்வரும் முறையின்கீழ் நிறைவேற்றப்படுகின்றது.

(1) நாடுகளுக்கு குறிப்பிட்ட தொகை அளவுக்கு அனுமதிக்கப் படும். அத்தொகை சர்வதேச வியாபாரப்பங்களிப்புக்கு ஏற்ப வரையறுக்கப்படும்.

(2) கணக்கு வடிவில் அனுமதிக்கப்பட்ட தொகை நாடுகளுக் கிடையே மாற்றம் செய்யப்படும்.

(3) மாற்றப்படும் நாடு மாற்றும் நாட்டிற்கு மாறக்கூடிய பணத்தில் செலுத்த வேண்டும் அல்லது கடனாக பதிவளிக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் தமது சென்மதி நிலுவைப் பிரச்சனையைத் தீர்க்க விசேட எடுப்பனவு உரி மையைப் பயன் படுத்தலாம். இது தங்கத்திற்குப் பதிலாகப் பயன் படுத்தப்படும். இதற்கு உருவம் இல்லை.

சுங்கச் சமாசம்

அங்கத்துவ நாடுகளிற்கு இடையில் வர்த்தகம் தொடர்பான எல்லாத்தடைகளையும் நீக்கி மற்றைய நாடுகளுடனான வர்த்தகக் கொள்கைகளை ஒழுங்குபடுத்துகின்ற ஒருவகைப் பொருளாதார கூட்டு அமைப்பாகும்.

உ+ம்: ஐரோப்பிய பொருளாதார சமூகம்.
கிழக்கு ஆபிரிக்க சமூகம்.

இச் சுங்கச் சமாசத்தின் குறிக்கோள்களாவன,

(1) குறித்த அங்கத்துவ நாடுகளிடையில் கூட்டு ஒத்துழைப்பு;
(2) தொழில்களைப் பரிமாற்றிப் பகிர்ந்தளித்தல்
(3) மூலகங்களை உச்சளவில் பயன்படுத்தல்
(4) அங்கத்துவ நாடுகளின் பொருட்கட்கு உடனடியான கூடிய சந்தை வாய்ப்பு
(5) கூட்டுநாடுகளின் சுதந்திர வர்த்தகத்தின் மூலம் பொரு ளாதார அபிவிருத்தி காணல்.

ஆசிய அபிவிருத்தி வங்கி

1963-ம் ஆண்டு மணிலா மாநாட்டுத் தீர்மானப்படி 1966-ம்ஆண்டு டிசம்பர் மாதம் இந் நிறுவனம் உருவாக்கப்பட்டது. பிலிப்பைன் தேசத்திலுள்ள மணிலாநகரில் தலைமை அலுவலகத்தைக் கொண் டது. ஆசிய தூர கிழக்குப் பிராந்திய நாடுகளுக்கு நிதி அளித்தலை யும், ஆலோசனை வழங்கலையும், நோக்கமாகக் கொண்டது. இவ் வங்கி தனது அங்கத்துவ நாடுகளுக்கு பின்வரும் முறைகளில் உதவி களை வழங்கிவருகின்றது.

(1) அபிவிருத்திச் செயற் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப் படுத்துவதற்கான விசேட உதவி.

(2) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான கடன்களை வழங்குதல்.

(3) தொழில் ஸ்தாபனங்களின் மூலதனத்தில் பங்கு பற்றலும் கடன் வழங்கலும்.

(4) தனியார், பொதுத்துறை நிறுவனங்களுக்கு தனித்து அல்லது வேறு நிறுவனங்களுடன் இணைந்து நிதி உதவி வழங்கல்.

(5) தொழிலாளருக்கு பயிற்சி வழங்கல்.

(6) மாணவர்களுக்கு உயர்கல்விபெற புலமைப் பரிசில் வழங்கல்

இலங்கையைப் பொறுத்து பின்வரும் உதவிகளை இவ் வங்கி வழங்கியுள்ளது.

(1) கிராமிய அபிவிருத்திக்கும், மின்சார வசதிக்கும் கடன் வழங்கியுள்ளது.

(2) தெங்குப் பயிர்ச்செய்கைக்கும், மகாவலி அபிவிருத்திக்கும் கடன் வழங்கியுள்ளது.

(3) அண்மையில் தனியார்துறை கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய 550 மில்லியன் ரூபா கடனாக வழங்கப் பட்டுள்ளது.

இலங்கைத் தேசிய கைத்தொழிற் சழகம்

இது கைத்தொழிலாளரின் தேசிய நிறுவனமாகும் இதன் நோக்கங்களாவன.

(1) இலங்கையில் கைத்தொழில்களை மேம்படுத்தல், கைத்தொழில் வழர்ச்சியை அடைதல்.

(2) கைத்தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்

(3) அங்கத்தவர்களுக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்தல்;

(4) கைத்தொழில் பொருட்காட்சிகளையும், கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்தல்.

தேசிய வடிவமைப்புக் கழகம்

இந் நிலையம் கைப்பணியாளருக்குப் பொருள் வடிவமைப்புச் சம்பந்தமான தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்கும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடன் வசதிகளை அளிக்கிறது. மேலும் கைப்பணியாளர்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் இரண்டு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவையாவன,

(1) கைப்பணிப் பொருட் சபை

(2) தேசிய கைவேலைக் கழகம்.

சிறீலங்கா வியாபார அபிவிருத்தி நிலையம்

இந் நிறுவனம் 1984-இல் உருவாக்கப்பட்ட ஒரு இலாபநோக்கற்ற கம்பனியாகும். நிதித்திட்டமிடல் அமைச்சு அமெரிக்கா நாட்டு உதவியுடன் இக்கம்பனி உருவாக்கப்பட்டது.

இந் நிறுவனத்தின் பிரதான தொழிற்பாடுகளாவன,

(1) தனியார் பொதுத்துறையுடன் இணைந்து முதலீட்டுத்திட்டங்களை உருவாக்கல்.

(2) வியாபார நிலைமை தொடர்பாக சரியான தகவல்களை முதலீட்டாளர்களுக்கு வழங்கல்.

(3) திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குதல்.

(4) முகாமைத்துவ பயிற்சிகளை நடாத்தி சான்றிதழ்களை வழங்குகின்றது.

தீர்வையற்ற கடை

தீர்வைகள் இன்றி பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு அவற்றினை அந்நியச் செலாவணியில் விற்பனை செய்யும் கடையினை தீர்வையற்ற கடை என அழைப்பர். முதன் முதலில் 1972-இல் தீர்வையற்ற கடை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டது. வெளி நாடுகளில் இருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு தீர்வையின்றி, மேந்தலை செலவினையும் லாபத்தினையும் உள்ளடக்கி விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. இங்குசகல மின்சார, வீட்டுப் பாவனைப் பொருட்கள் உட்பட பல்வேறு விதமான பொருட்களை விற்பனை செய்யப்படுகிறது.

உதாரணம்:- தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ கசட், டெக் கமரா, குளிர்ச்சாதனப்பெட்டி, ஆடைகள், குடிவகைகள்.

இத் தீர்வையற்ற கடைத்தொகுதியினால் பின்வரும் நன்மைகள் ஏற்படுகின்றன.

(1) அந்நிய செலாவணி உழைப்பு

(2) குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்ய வாய்ப்பு.

(3) வேலை வாய்ப்பு

தீர்வையற்ற கடைத்தொகுதியில் பின்வரும் வகுதியினரான மக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியும்.

(1) உல்லாசப் பிரயாணிகள்

(2) வெளிநாட்டுச் செலவாணி உழைத்த இலங்கையர்கள்.

(3) தூதரகப் பணியாளர்கள்

தீர்வையற்ற கடைத் தொகுதியில் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்தற்பொருட்டு கழிவுத் தொகையை தீர்மானிக்கும் போது பின்வரும் காரணிகள் கருத்திற் கொள்ளப்படும்.

(1) வெளிநாடுகளில் தங்கியிருந்த காலம்

(2) கொண்டுவரப்பட்ட பொருட்களின் மீது விதித்தவரி.

தீர்வையற்ற கடைத்தொகுதியில் பொருட்களுக்கான கொடுப்பனவினை உல்லாசப் பிரயாணிகள் யாசோலை மூலம் செலுத்தலாம். இக் கடைகள் பின்வரும் நிலையங்களினால் முகாமை செய்யப்படுகிறன.

(1) வரையறுத்த இலங்கைக் கப்பல் வழிகள் கம்பனி.

(2) வரையறுத்த விமானத்தள விமான சேவைகள் கம்பனி

இலங்கை வணிகக் கழகம் (Ceylon Chamber of Commerce)

தொழில் தருனர்களை அல்லது அவர்களின் அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு ஆகும். கைத்தொழில் வர்த்தக, சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோரை அங்கத்தவர்களாகக் கொண்ட தன்னிச்சையான சங்கமாகும்.

இக்கழகம் தன்நிதியினை அங்கத்துவக் கட்டணம் மூலமும், சேவைகள் மூலம் பெறும்.

(1) அங்கத்தவர்களை அரச ஆவணங்களில் முதலீடு செய்யத் தூண்டுகிறது.

(2) உற்பத்தி நாட்டு சான்றிதழ் வழங்கல்

(3) ஏல விற்பனை நடாத்தல்.

(3) சிறந்த ஏற்றுமதியாளரை தெரிவு செய்ய உதவுதல் மூலம் மேற்படி அரசுக்கு உதவுகின்றது.

இலங்கை வணிகக் கழகம் தனது அங்கத்தவர்களுக்கு ஆற்றி வரும் சேவைகளாவன,

(1) வர்த்தக வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்பெற வாராந்த சஞ்சிகையை வெளியிடல்

(2) சமகாலத் தகவல்களை அறியக்கூடிய நூல் நிலையச் சேவையை வழங்கல்.

(3) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ் வழங்கல்

(4) தொழில்துறையையும் அரசாங்கத்தையும் தொடர்புபடுத்தல்.

(5) ஏற்றுமதிப் பொருள்களுக்கான ஏல விற்பனையை நடாத்துதல்

(5) ஏற்றுமதிப் பொருள் பற்றிய தரமதிப்புப் பத்திரத்தை வெளிநாட்டவருக்கு வழங்கல்.

(7) ஜனாதிபதி ஏற்றுமதி விருதுக்கு தகமையுடையோரைத் தெரிவுசெய்ய உதவுதல்.

(8) பயிற்சி வகுப்புக்கள் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல்.
(9) அங்கத்தவர்களிடையே பிணக்குகளைத் தீர்த்தல் வணிகசமூக அமைப்புப் பிணக்கினை ஆராய்ந்து நடுத்தீர்ப்பு தீர்க்கிறது.

தேசிய வணிக முகாமை நிறுவனம்

1968–ல் உருவாக்கப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் 1972–ல் தேசிய வியாபார முகாமைத்துவ நிலையம் எனப் பெயர் மாற்றப்பட்டது. அரசினால் நியமிக்கப்பட்ட தலைவர் உட்பட ஏழு பேரைக் கொண்ட சபையினாலும், சர்வதேச தொழிலாளர் நிறுவன பிராந்திய சபையினாலும் மேற்பார்வை செய்யப்படுகிறது;

இந் நிலையம் பின்வரும் முறைகளில் இலங்கையின் வினைத் திறமையை மேம்படுத்துவதற்கு உதவுகிறது.

(1) தொழில் நிறுவனங்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்;
(2) தொழில் நிறுவனங்களின் நடைமுறைப் பிரச்சினைகளை ஆய்வு செய்து ஆலோசனை வழங்கல்.
(3) முகாமைப் பயிற்சி வகுப்புக்களை ஏற்பாடுசெய்து நடாத்துதல்.

இலங்கைத் தைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம்

இந் நிறுவனம் 1955–ம் ஆண்டு 15–ம் இலக்க இலங்கை கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிலைச் சட்டத்தின் கீழ் அவ் வருடம் நிறுவப்பட்டது. கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான தொழில் நுட்ப அறிவை வழங்கவும், மூலப் பொருட்கள் முடிவுப்பொருட்களைப் பரிசோதிக்கவும், ஆராய்ச்சிகளை நடத்தும் பொருட்டும் இந் நிலையம் உருவாக்கப்பட்டது. அரசினால் நியமிக்கப்பட்ட தலைவரைக் கொண்ட பணிப்பாளர் சபையால் இது முகாமை செய்யப்படுகிறது.

இந் நிறுவனம் பின்வரும் முறைகளில் கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவுகிறது:

(1) மூலப்பொருட்களினதும், முடிவுப் பொருட்களினதும், தரப் பரிசோதனைகளை மேற்கொள்ளல்.
(2) புதிய உற்பத்தி முறைகளையும், தொழில் நுட்பங்களையும் அபிவிருத்தி செய்தல்.
(3) தொழில் நுட்ப அபிவிருத்தி, சிக்கனம், விரயங்களைத் தடுக்க ஆலோசனை வழங்கல்.

(4) புதிய மூலப்பொருட்களை பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

நுகர்வோர் பாதுகாப்பு நிதியம்

நுகர்வோர் பாதுகாப்பு நிதியம் பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டது.

(1) நுகர்வோருக்கு அறிவூட்டல்.
(2) நுகர்வோர் அமைப்புகளை அபிவிருத்தி செய்தல்.
(3) நுகர்வோர் அமைப்புகளை நிருவகித்தல்.
(4) நுகர்வோருக்கு தகவல்களை வழங்கல்.

இந் நிதியம் பின்வரும் மூலகங்களில் இருந்து தனக்கு அவசியமான நிதியைப் பெறுகின்றது.

(1) பாராளுமன்றத்தினால் தயாரிக்கப்படும் பாதீடு;
(2) நன்கொடைகள்.
(3) நீதிமன்றம் அறவிடும் தண்டப்பணம்.
(4) பறிமுதல் செய்த பொருட்களின் பெறுமதியில் 50%ம் தொகையைப் பெறல்.

இலங்கைத் தேசிய கூட்டுறவுப் பேரவை

கூட்டுறவு அமைப்பு தொடர்பான உச்சமட்ட நிறுவகம் (Apex Organization) இதுவாகும். 1971-ம் ஆண்டு கூட்டுறவு புனரமைப்புக்கு முன் கூட்டுறவு சம்மேளனம் என அழைக்கப்பட்ட இந் நிறுவனம் 1972 இல் 'இலங்கை தேசிய கூட்டுறவுப் பேரவை'யாக மாற்றப்பட்டது. கூட்டுறவுக் கொள்கையை அபிவிருத்தி செய்யவும், கூட்டுறவு அமைப்பின் தேசிய ரீதியாகச் சேவையாற்றும் பொருட்டும் இப்பேரவை உருவாக்கப்பட்டது. இது பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது.

(1) கூட்டுறவுக் கொள்கைகளைப் பாதுகாத்தல்
(2) கூட்டுறவுக் கொள்கைகளை வகுத்தல்.
(3) அரசுக்கு ஆலோசனை அளித்தல்.
(4) கருத்தரங்கை ஒழுங்கு செய்தலும் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு உதவுதலும்;

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

இது கூட்டுறவு அமைப்பு தொடர்பான அரச திணைக்களமாகும் இது பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்ளுகின்றது.

(1) கூட்டுறவுச் சங்கங்களை பதிவு செய்தல்.

(2) கூட்டுறவுச்சங்கக் கணக்குகளை ஆய்வு செய்தல்;
(3) கூட்டுறவுச்சங்கம் தொடர்பாக மக்கள் புகார்களை விசாரித்தல்

ஆசிய தீர்வையகம்

ஆசிய தீர்வையகத்தில் 7 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவையாவன,

(1) இந்தியா
(2) பங்களாதேஷ்
(3) பர்மா
(4) ஈரான்
(5 நேபாளம்
(6) பாகிஸ்தான்
(7) இலங்கை

இத் தீர்வையகத்தின் ஊடாக நடவடிக்கையில் ஈடுபடுவதனால் பின்வரும் நன்மைகள் ஏற்படும்.

(1) சர்வதேச காசோலைகளைத் தீர்ப்பதில் உள்ள தாமதத்தை தவிர்க்கலாம்.
(2) சர்வதேச காசோலைகளைத் தீர்ப்பதனை சுலபமாக்கிறது.
(3) ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் ஏற்படும் கொடுக்கல் வாங்கலை இலகுவாகத் தீர்த்துக் கொள்கின்றது;

கூட்டுறவு முகாமைச் சேவை நிலையம்

1970-ம் ஆண்டின் 33-ம் இலக்க அரச வர்த்தகக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் 1973-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ம் திகதி அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி அமைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு அமைப்பினை வெற்றிகரமாக அபிவிருத்தி செய்யும் பொருட்டு இவ் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது.

(1) கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைபற்றி ஆலோசனை வழங்கல்.
(2) முகாமைத் திறமையை கூட்டுறவு அமைப்புக்கு அறிமுகம் செய்தல்.
(3) பயிற்சி அளித்தல்;
(4) கூட்டுறவுக் கல்வி புகட்டல்.

ஆசியான்

ஆசியான் என்ற அமைப்பு 1967-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவ் அமைப்பில் ஐந்து நாடுகள் அங்கம் வகிக்கின்றன, அவையாவன,

(1) பிலிப்பைன்ஸ்.
(2) சிங்கப்பூர்.
(3) மலேசியா.
(4) இந்தோனீசியா.
(5) தாய்லாந்து.

இவ்வமைப்பின் குறிக்கோள்களாவன:

(1) பொருளாதார கலாச்சார ரீதியிலான உறவுகளை வலுப் படுத்தல்.
(2) ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஒப்பந்த நாடுகளிடையே ஒழுங்கான தீர்வை முறையை அமுல்படுத்தல்.
(3) அருமையான பொருட்களை மிகையாக உள்ள ஒப்பந்த நாடுகளிடையே பெற்றுக்கொள்ளல்.
(4) கம்யூனிச கொள்கையை எதிர்த்தல்

இவ்வமைப்பில் இலங்கை சேரவிரும்பியும் புவியியல் ரீதியான காரணங்களால் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம்

இவ் அமைப்பு 1958–ல் உருவாக்கப்பட்டது. பிரான்ஸ். மேற்கு ஜேர்மனி, நெதர்லாந்து: பெல்ஜியம், லக்சம்பேர்க், பிரிட்டன் போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளின் வர்த்தகக் கூட்டே இதுவா கும். இதன் பிரதான நோக்கங்களாவன,

(1) அங்கத்துவ நாடுகளிடையே வியாபாரத்தை விருத்தி செய்தல்
(2) பொது விவசாயக் கொள்கையை ஸ்தாபித்தல்.
(3) ஒரு சுங்கத்துறை சுங்கத்தை உருவாக்கி உறுப்பினர் அல்லாதோருக்கு எதிராக ஒரு பொதுப் பாதுகாப்பு வரி முறையைப் படிப்படியாக ஏற்படுத்தல்.

தெற்கு ஆசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளின் உச்சி மகாநாடு (சார்க்)

பிரதேசக் கூட்டுறவை தெற்காசியாவில் உருவாக்குவதற்கான அமைப்பாகும். இவ் அமைப்பில் ஏழு நாடுகள் அங்கம் வகிக்கின்றன அவையாவன. பாகிஸ்தான், பங்களதேஷ், இந்தியா, இலங்கை, மாலைதீவு, நேபாளம், பூட்டான் ஆகும் இம் மகாநாட்டின் குறிக் கோள்களாவன:

(1) அரசியல் பொருளாதார இடைவெளியை நிரப்புதல்
(2) நம்பிக்கை, பரஸ்பர நலன், சமத்துவத்தின் அடிப்படையில் உறவுகளை ஏற்படுத்தல்.

(3) அங்கத்துவ நாடுகளிடையே கலாச்சார செய்தித் தொடர்புகளை ஏற்படுத்தல்.

(4) உணவு இருப்புத் தொடர்பாக தாங்கல் இருப்பு ஒன்றைப் பேணல்.

பாங்கொங் உடன்படிக்கை

தெரிவு செய்யப்பட்ட சில பொருட்களுக்குத் தீர்வைச் சலுகைகளை வழங்குவதற்கு அங்கத்துவ நாடுகளுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒரு உடன்படிக்கை இதுவாகும். இவ் உடன்படிக்கையில் ஐந்து நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

(1) இந்தியா
(2) பங்களாதேஷ்
(3) இலங்கை
(4) லாவோஸ் குடியரசு
(5) தென்கொரியக்குடியரசு

77 நாடுகளின் குழு

ஆசிய, ஆபிரிக்க. லத்தீன் அமெரிக்கா அபிவிருத்தியடையும்நாடுகளை உள்ளடக்கிய 77 நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட குழு அல்லது தொகுதி இதுவாகும். இக் குழுவில் இலங்கையும் அடங்குகின்றது. இக்குழு பொருளாதார அரசியல், சர்வதேச பிரச்சினைகள் விடயத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் நோக்குகளை, கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றது.

கொமிக்கோன்

கொமிக்கோன் எனப்படுவது பரஸ்பர பொருளாதார உதவிச் சபை. ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்துடன் தொடர்பில்லாத சமவுடமை நாடுகளிடையே வணிகப் பொளாதார கூட்டுறவை ஸ்தாபிப்பதற்கும் பேணுவதற்கும் ஏற்பட்ட அமைப்பு இதுவாகும். இவ் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளாவன,

(1) சோவித் ரஷ்யா
(2) ஜேர்மன் ஜனநாயக் குடியரசு
(3) செக்கோசிலாவாக்கியா
(4) ருமேனியா
(5) ஹங்கேரி
(6) போலந்து
(7) பல்கேரியா

8

உங்காட் — வியாபாரத்துக்கும் அபிவிருத்திக்குமான ஐக்கிய நாடுகள் மகாநாடு (UNCTAD)
(United Nation Confernce for Trade & Development)

ஐக்கிய நாடுகளின் நிரந்தர அமைப்பாக 1964 டிசம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் வியாபாரம் தொடர்பான பிரதான தடைகளை நீக்கி அந் நாடுகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு சர்வதேசரீதியான ஒத்துழைப்பைப் பெறுதலை நோக்கமாகக் கொண்டது. இது பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது.

(i) 18 வியாபாரப் பண்டங்கள் தொடர்பான விலை ஒருமைப்பாட்டிற்கான தீர்மானங்கள் செய்யப்பட்டமை.

(ii) வளர்ச்சி அடைந்த கைத்தொழில் நாடுகளில் குறைந்த செலவில் உற்பத்தி செய்கின்ற செயற்கைக் கைத்தொழில் பொருட்களின் போட்டியில் இருந்து வளர்முக நாடுகளின் மூதல் விளைவு பொருட்களைப் பாதுகாத்தல்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வர்த்தக அபிவிருத்திக்கு பின்வரும் வழிகளில் உதவுகிறது.

(i) காலத்திற்குக் காலம் அங்கத்துவ நாடுகளை அழைத்து சர்வதேச வர்த்தகத்தில் அவர்கள் எதிர்நோக்கும் தடைகளை ஆராய்ந்து நிவாரணம் வழங்குதல்.

(ii) அங்கத்துவ நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களின் விலையை உறுதியாக வைக்க நடவடிக்கை எடுத்தல்.

(iii) பாதுகாப்பு இருப்புப் பேணல்

(iV) அங்கத்துவ நாடுகளின் வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய முன்னேறிய நாடுகளின் உதவி கோரல்.

(v) வளர்முக நாடுகளில் இருந்து இறக்குமதி பெய்யப்படும் சில குறிப்பிட்ட உற்பத்திப் பொருட்கள் மீது வளர்ச்சி அடைந்த நாடுகள் உயர்ந்த தீர்வையை விதிப்பதைப் பாதுகாக்க வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமிடையே ஒப்பந்தங்களை ஏற்படுத்தி அவற்றை நடைமுறைப்படுத்தல்.

ஆசிய பசுபிக் நாடுகளான பொருளாதார சமூக ஆணைக்குழு (ESAP)
(Economic and Social Commission for Asia and Pacific)

இந்நிறுவனம் 1947ஆம் ஆண்டு "ஆசிய தூர கிழக்கு நாடுகளுக்கான பொருளாதார ஆணைக்குழு" என்னும் பெயரில் உருவாக்கப்

பட்டு 1974 இல் ''ஆசிய பசுபிக் நாடுகளான பொருளாதார சமூக ஆணைக்குழு'' எனப் பெயர்கொண்டு அழைக்கப்படுகிறது.

இதன் பிரதான நோக்கங்களாவன;

(i) சமூக பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக உறுப்பி னர் நாடுகளிடையே ஒத்துழைப்பை வளர்த்தலும் வியா பாரத்தை அபிவிருத்தி செய்தலும்.

(ii) பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள். செயற் திட்டங்கள் சம்பந்தமாக உறுப்பினர் நாடுகளுக்கு உதவியளித்தல்.

(iii) உணவு அதிகரிப்பு, வறுமையைக் குறைத்தல், சனத்தொகை அமுக்கங்களுக் கெதிரான நடவடிக்கைகள், வேலையின்மை யைத் தீர்த்தல் ஆகியவை சம்பந்தமாகச் சிறப்பான கவனம் செலுத்துதல்.

சி பேங் பயண நிலையம்

இலங்கை வங்கி எயர் லங்காவுடன் கூட்டாக இணைந்து சி பேங் பயண நிலையத்தை நிறுவியுள்ளது. மிகச் சிறப்பான பயண வசதி களை, சிறப்பாக வெளிநாடுகளுக்கு வழங்குவதே இதன் பிரதான நோக்கமாகும். இந் நிலையம் பின்வரும் தொழிற்பாடுகளை மேற் கொள்கிறது.

(1) உல்லாசப் பிரயாணிகள் காசோலைகளை வழங்கல்.

(2) விமான டிக்கற்றை விநியோகித்தல்;

(3) விமான டிக்கற்றை பதிவுசெய்தலும், ஆசன ஒதுக்கீடும்.

(4) ஹோட்டல்களில் தங்குமிட வசதிககளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

தேசிய அபிவிருத்தி வங்கி

இவ் வங்கி 1979ல் உருவாக்கப்பட்டது. இவ்வங்கியின் மூலத னத்துக்கு இலங்கை அரசு, இலங்கை மத்தியவங்கி, இலங்கை வங்கி மக்கள் வங்கி ஆகியவை பங்களிப்புச் செய்துள்ளன. இதன் பிரதான நோக்கங்களாவன.

1. சிறிய நடுத்தர கைத்தொழில்களுக்கு நிதி உதவி வழங்கி கிராமியத்துறையை அபிவித்தி செய்தல்.

2. மூலதனச் சந்தை அபிவிருத்தி உதவுதல்.

3. திட்டங்களை மேம்படுத்தல்.

4; சிறிய நடுத்தர கைத்தொழில் செய்திகள் (S M I NEWS) எனும் காலாண்டு சஞ்சிகையை வெளியீடல்.

அண்மையில் இவ்வங்கி வியாபாரம் தொடர்பான ஆலோசனையை வழங்கும் பொருட்டு வியாபார நிபுணத்துவ சேவைப் பிரிவினை உருவாக்கி இதன் மூலம் தொழில் தொடர்பான ஆலோசனைகளை நிறுவனங்களுக்கு பின்வரும் துறையில் வழங்குகின்றது.

(1) வியாபாரப் பதிவு, கம்பனி உருவாக்கம்.

(2) திட்ட புனரமைப்பும் நிதி மீளக் கட்டமைப்பும்.

(3) சாத்தியக் கூற்று அறிக்கையைத் தயார்படுத்தல்.

(4) பெரிய திட்டங்களுக்கு சின்டிகேட் அடிப்படையில் கடன் வசதியளித்தல்.

முகவர் வங்கித் தொழில்

உள்ளூர் அரசவங்கிகள் 1988 ஒக்டோபரில் இத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முகவர்கள் நியமிக்கப் பட்டு அவர்கள் ஊடாக சிறு கடன்படுநர்களுக்கு இலகுவான நியதிகளில் எளிமையான ஆவணங்களுடன் கொடுகடன் வசதிகளை வழங்குதல். வங்கிகள் முகவர்களுக்கு 200,000/- வைக் கடனாக 18% வட்டியுடன் வழங்கும். முகவர்கள் இத்தொகையை 30% வட்டியுடன் சிறுகடன்படுநர்களுகளுக்கு ஆகக்கூடியது 5000/- வழங்கலாம். இத் திட்டத்தின் பிரதான நோக்கங்கள்.

(1) சிறு கடன்படுநர்க்கு கடன்பெறும் வசதிகளை அளித்தல்.

(2) சுலபமான தவணைகளிலும் எளிமையான ஆவணமுறைகளிலும் கடன்களை வழங்கல்.

(3) வங்கிப்பழக்கத்தை படிப்படியாக கிராம மக்களிடையே ஏற்படுத்தலாம்.

அண்மையில் சம்பத்வங்கியும் இவ் முகவர் வங்கித் தொழிலை அறிமுகப்படுத்தியுள்ளது.

மூலதனச் சந்தை

நீண்டகால நடுத்தர நிதி வழங்கும் நிறுவனங்களைக் கொண்ட அமைப்பு மூலதனச் சந்தை என அழைக்கப்படும்.

இலங்கையில் மூலதனச் சந்தையில் பின்வரும் நிறுவனங்கள் உள்ளடங்குகின்றன.

(1) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.

(2) தேசிய அபிவிருத்தி வங்கி

(3) வரையறுக்கப்பட்ட மூலதன அபிவிருத்தி முதலீட்டுக்கம்பனி
(4) வரையறுக்கப்பட்ட கொழும்பு ஆவணமாற்றுக் கம்பனி.
(5) அரச ஈட்டு முதலீட்டு வங்கி.
(6) காப்புறுதிக் கூட்டுத்தாபனங்கள் அல்லது கம்பனிகள்.

இலங்கையில் மூலதனச் சந்தையின் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டதாகக் காணப்பட்ட போதிலும் 1980-ம் ஆண்டில் இருந்து இச் சந்தையின் அபிவிருத்தித் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

(1) கம்பனி அமைப்புகளை விருத்தி செய்ய உதவும் 1982-ம் ஆண்டு கம்பனிகள் சட்டம் அறிமுகம்.
(2) வரையறுக்கப்பட்ட ஆவணமாற்றுக் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டு இரண்டு வியாபாரத்தளம் நிறுவியமை.
(3) காப்பாவனசபை நிறுவி பங்குகள் ஒழுங்குபடுத்தப்பட்டமை.
(4) பொதுக் கம்பனிகள், மக்கள் கம்பனிகள், விலை கூறப்பட்ட கம்பனிகளுக்கான வரி விடுதலைகள், சலுகைகள்
(5) பங்குச்சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடவும் கடன் வழங்கவும் வரையறுத்த மூலதன அபிவிருத்தி முதலீட்டுக்கம்பனி ஸ்தாபிக்கப்பட்டமை.

குத்தகைக் கம்பனி

தொழில் நிறுவனங்களிற்கு வேண்டிய நிலையான சொத்துக்களை குத்தகையடிப்படையில் வழங்கும் கம்பனிகள் குத்தகைக் கம்பனிகள் ஆகும்.

இக்கம்பனிகளால் வழங்கப்படும் குத்தகைகளை இருவகைப்படுந்தலாம்:

(1) நிதிக் குத்தகை (2) செயற்பாட்டு Aக் குத்தகை

ஒர் தொழில் ஸ்தாபனம் நிலையான சொத்துக்களை குத்தகை அடிப்படைடல் பெறுவதால் பின்வரும் நன்மைகளை அனுபவிக்கும்.

(1) கூடியவரி நிவாரணம் பெறமுடியும்
(2) குறுகியகால ஏற்பாட்டில் பெறமுடியும்.
(3) போதிய நிதி இல்லாதபோதிலும் சொத்துக்களைக் கொள்வனவு செய்யலாம்.
(4) சொத்துக்களைப் பராமரிப்பது இலபம்.

வியாபாரச் சேர்க்கை

நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து இயங்குவதனை வியாபாரச் சேர்க்கை என்பர். ஒருவகையான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து இயங்குவதனை கிடைநிலைச் சேர்க்கை எனவும், முடிவுப் பொருளுக்கான மூலப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனமும் ஒன்று சேர்ந்து இயங்குதல் நிலைக் குத்துச் சேர்க்கை எனவும் அழைக்கப்படும்.

காட்டல்:-

திரம்பனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்படும் ஒரு குழுவாகும். இதில் அங்கத்துவம் வகிக்கும் நிறுவனங்கள் சந்தையைப் பகிர்ந்து கொள்ளவும் இலாபத்தினை கட்டுப்படுத்த அல்லது விற்பனைப் பிரிவுகளை வரையறுக்க இணக்கம் காணுகின்றன. அங்கத்துவ நிறுவனங்களின் பதிவேடுகளை பரிசீலனை செய்யும் உரிமை மத்திய நிறுவனத்திற்கே உண்டு உ-ம் ஒபெக் நிறுவனம்.

குழு:-

இது ஓர் இடைநிலைச் சேர்க்கை ஒரேவகையான பொருட்கள். சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் தமது அளிப்பு, சந்தைவிலை என்பனவற்றை தமக்கிடையே கட்டுப்படுத்தும் நோக்கில் இணைந்து ஏற்படுத்தும் அமைப்புக் குழு ஆகும்.

தேக்கம்:- [பொதுச் சேர்மம்]

இது ஓர் இடைநிலைச் சேர்க்கை ஒரேவகையான பொருட்கள் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் தமது உற்பத்தி, அளிப்பு, சந்தை என்பனவற்றை தமக்கிடையே ஒதுக்கீடு செய்யும் நோக்கில் இணைந்து ஏற்படுத்தும் அமைப்பு தேக்கம் ஆகும்.

திட்டக் குழு:-

ஒரேவகையான பொருட்களை உற்பத்தி செய்வோர் தமது உற்பத்திப் பொருட்களை ஒரே மத்திய அமைப்பிடம் கையளித்து அவ்வமைப்பினூடே விற்பனை செய்து பெறும் வருமானத்தை தமக்கிடையே பங்கீடு செய்யும் வகையிலான அமைப்பு திட்டக்குழு ஆகும்.

நம்பிக்கை:-

கம்பனியின் சிறுபகுதிப் பங்குகளைப் பெற்று வைத்திருக்கும் பொதுவான நம்பிக்கைப் பொறுப்பாளர் குழு இது ஆகும். பங்குகளின் உரிமையைக்கொண்டு நியமிக்கப்படும் இயக்குனர்கள் மூலம் இணக்கமான கொள்கைகளின் கீழ் இவ்வமைப்பு இயங்கும்.

தொழில் நுட்ப மாற்று நிதியம்
(Technology Transfer Fund)

இந் நிதியம் பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டது.

(i) சிறிய நடுத்தர கைத்தொழிலாளர்கள் தமது தொழில் நுட்பவியலாளர்களைப் பயிற்றுவிக்க நிதி வழங்குதல்.
(ii) தரக்கட்டுப்பாட்டிற்கு நிதிவழங்கல்.
(iii) ஆய்வுகூட வசதி வழங்கல்
(iv) தொழில் நுட்ப உதவிபெற நிதிவழங்கல்.

இந் நிதியத்தின் கீழ் பின்வரும் உள்ளூர் நிறுவனங்கள் தொழில் நுட்ப அறிவினை வழங்குகின்றன?

(1) கைத்தொழில் அபிவிருத்திச் சபை.
(2) கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சிக்கழகம்.
(3) தேசிய ஆராய்ச்சி நிலையம்.
(4) புடைவை தைத்த ஆடைகள் தொழிற் பயிற்சி நிலையம்.

இலக்கியன் பதிப்பகம், பதிப்பக சாலை,
ராஜா தியேட்டர் அருகாமை, யாழ்ப்பாணம்.